

குங்குமச்
சிமிழ்
1-3-2007
விலை ரூ.4
தாக்கு
மின்னலே
தாக்கு !

முழு நாவல்

# தாக்கு மின்னலே தாக்கு!

எமல்டா அடுக்கு மாடிக் குடியிருப்பின் மொட்டைமாடி.

இரவாடை அணிந்த கதிரவன் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு வயது 28. உயரம் 178செ.மீ. திராவிட நிறம். ஐஸி ஐஸி ஐ வங்கி கிளை ஒன்றில் மேலாளராக பணிபுரிபவன். தகுதி சார்ந்த பிரம்மச்சாரி.

அவனது இடது கையில் மது க்கிண்ணம் இருந்தது. அதில் வெள்ளை ஒயின் நிறப்பப்பட்டிருந்தது. ஒயினை ஒரு 'ஸிப்' உட்கொள்வதும் ஸ்ட்ராபெர்ரி பழத்தை சிறிது கடித்துக் கொள்வதுமாக இருந்தான். ஒயினின் துவர்ப்பு பழத்தின் தித்திப்பு ஒரு புதிய கலாப்பூர்வ கூட்டணி. சிவப்பு ஒயின் குடிக்கும் போது துணைக்கு சோயாபீன்ஸ் மீல் மேக்கரை வைத்துக் கொள்வான். நண்பர்கள் கூட்டு சேர்ந்தால் ஷாம்பெய்ன் குடிப்பான்.

விசேஷ பார்ட்டிகளில் 'தெக்கிலா' எடுத்துக் கொள்வான். அபூர்வ சந்தர்ப்பங்களில் காக்டெய்ல் குடிப்பான்.

வானத்தை பார்த்துக்கொண்டிருந்த கதிரவன் நெற்றி சுருக்கினான். வனத்தில் நட்சத்திரங்களே இல்லை. பதிலாக மசமசப்பான கருநீல நிற வானமே காணக்கிடைத்தது. தூரத் திசையிலிருந்து ஒரு குளிர்காற்று தவழ்ந்து வந்தது. அது கதிரவன் முகத்தை முட்டிமோதி சென்றது. தலைக்கேசத்தைக் கோதிவிட்டு சென்றது.

சில நொடிகள் தாமதத்தில் திரள்திரளாய் மழை மேகங்கள் வந்து குழுமின.

இரவு நடன விடுதிகளில் நடனப்பெண்கள்

## ஆர்னிகா நாசர்





நெருக்கமாய் ஆடிக் கொண்டே புட்டங்களால் இடித்துக் கொள்வது போல மழை மேகங்கள் இடித்துக் கொண்டன.

தொடர்ந்து மின்னல்கள் வெட்டின.

சில மின்னல்கள் இடிகளை உற்பத்தி செய்யவில்லை.

சில மின்னல்கள் இடிகளை உற்பத்தி செய்தன.

வானத்தைக் கிறிக்கொண்டு இலை நரம்புகள் போல கோடுகள் கிழித்துக் கொண்டு தரை இறங்கின. ஆயிரம் டன் எடையுள்ள இரும்புகுண்டுகளை மழை மேகங்கள் தவற விட்டன. அவை 'பொங்கார்' என எங்கோ விழுந்து பெரும்சப்தம் கிளப்பின.

ஒயிலை உறிஞ்சிக் கொண்டே மின்னல் வானில் அரங்கேற்றும் வர்ண ஜாலங்களை, ஒலி வித்தைகளை ரசித்தான் கதிரவன்.

வழக்கத்தை விட தீவிரமான ஒரு மின்னல் சரசரவென கிளைத்து 50000'F வெப்பத்தை உற்பத்தி செய்தபடியே கதிரவனின் நூறாவது மீட்டரில் சாட்டை சொடுக்கியது.

'ஊஃபி!'

நகரும் ஆயிரம் டெஸிபல் ஒலி நதிகள் சங்கமித்து இரண்டாயிரம் டெஸிபல் இடியாய் கதிரவனுக்கு நூறாவது மீட்டரில் பிக்பாங்கியது.

தொடர்ந்து மின்னல்களும் இடிகளும் கதிரவனை வட்டம் அமைத்து கண்காட்சி நடத்தின.

'ஓவ்'

கதிரவனின் ஒரு மனம் எச்சரித்தது. 'முட்டாள்! இடிகளும் மின்னல்களும் உனக்கு மிக அருகில் பல விபரீதங்களை அரங்கேற்றி காட்டிக் கொண்டிருக்கின்றன. படமெடுக்கம் பாம்புக்கு அருகில் நின்று படமெடுக்கும் பாம்பின் அழகை ரசிக்கும் தவளை போல் ரசித்துக் கொண்டுருக்கிறாய்.

ஒடு கதிரவா ஓடு. உனது மனைக்கு ஓடு. இரு காதுகளில் பஞ்சை அடைத்துக் கொண்டு தூங்கு!'

தொடர்ந்து மின்னல் கழைக்கூத்தாடித் தனமாய் வித்தைகள் காட்ட ஆரும்பித்தன.

வகை வகையான மின்னல்கள்.

கீழோடிப் போய் டிஜிட்டல் கேமிராவை எடுத்து வந்தான் கதிரவன். மழை வானில் நடக்கும் மகாஉற்சவத்தை படமெடுக்க ஆரம்பித்தான்.

அப்போதுதான் அது நடந்தது!

இதுவரை இல்லாத புதுவகை சப்தங்களுடன் ஒரு மின்னல்



கிளைத்தது.

கதிரவன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அந்த மின்ன மரவட்டை பூச்சி போல் சுருண்டது.

சுருண்டது தங்கமஞ்சள் நிறத்தில் மினிர்ந்தது.

மினிர்ந்தது நெருப்புக்கோளமாய் ராட்சச டெனிகாய்ட் வளையமா புதுவகை பூமராங்காய் வானத்திலிருந்து பூமிக்கு சீறியது. ஜகஜக ஜ ஜகா.

மைக்ரோ சூரியக்கோளம்.

தங்கக்குழம்பிலும் மஞ்சள் பசையிலும் மூழ்கி எழுந்த ஜயன் ஸைஸ் அப்பளம்.

நெருப்புக்கோளம் கதிரவனை குறிவைத்துதான் இறங்கியது கதிரவன் பார்க்கும் போது அது இலக்கு மாறி கதிரவனிலிருந் இருபதாவது அடியில் குதித்திறங்கியது. குதித்து சங்குசக்கரதமா சுழன்றபடி அடுத்து எங்குபோவது என அவதானித்தது. கண்ணில்லா அதற்கு கண்ணிருப்பது போல் கதிரவனுக்குபட்டது.

சரேலென கதிரவனை நோக்கி எட்டுகால் பாய்ச்சலில் சி சினந்தது. மதுக்கோப்பையை தவற விட்டுவிட்டு ஓட ஆரம்பித்தா மின்னல் துரத்த ஆரம்பித்தது.

படிக்கட்டுகளில் தபதபவென இறங்கி ஓட ஆரம்பித்தான்.

தொடர்ந்து துரத்தி வந்தது.

வரண்டாவில் ஓடினான். அசுரத்தனமாய் மின்னல் கதிரவனை தாக்கியது. தூரத்தே சிதறினான். சிதறினவன் எழுந்து நின்றா தாக்கிய மின்னல் அந்தரத்தில் நின்று சுழன்றது. கதிரவனின் ஓடு திசை அறிந்து தாக்க காகக்கண் காட்டியது.

தனது பிளாட் கதவைத் திறந்து பிளாட்டுக்குள் ஓடினா பிளாட்டுக்குள் கதிரவனுக்கும் மின்னலுக்கும் பலிங் சடுகு நடந்தது.

தொலைக்காட்டிப் பெட்டி வெடித்து சிதறியது. குளிர்சாத பெட்டி கருகி புகைந்தது. மின் விளக்குகள் டப்டப்பென்று வெடித்த பிளாட்டுக்குள்ளிருந்த பொருட்கள் சூறாவளியில் சிக்கியது போ அங்குமிங்கும் அலைக்கிழிந்தன.

அதற்கு மேல் ஓட முடியாமல் உச்சக்கட்ட அட்ரினலின் கரப் கதிரவன் ஸ்தம்பித்து நிற்க.

உக்கிரமாய் அதிக உக்கிரமாய் கதிரவனை தாக்கிவிட்டு ஜன் வழி பாய்ந்து செக்யூரிட்டி கூண்டை சிதறடித்தது மின்னல். செக்யூரிட் ஐம்பது மீட்டர் தூரத்துக்கு கறுக்கி தூக்கியெறியப்பட்டான்...

## 2

மருத்துவர் சூழாம் கதிரவனை பரிசோதித்துக் கொண்டிருந்தது. இருதயத் துடிப்பும் நாடித்துப்பும் இல்லவே இல்லை.

இருபக்க மார்பிலும் மின் அதிர்ச்சி கொடுத்து இதயத்தை மீண்டும் இயங்க வைக்க முயற்சித்தனர். ஒரு மருத்துவர் வாயோடு வாய் வைத்து செயற்கை சுவாசம் ஏற்படுத்தி தோற்றார். ஒரு மருத்துவர் இடதுபக்க மார்பை மஸாஜ் செய்து விட்டார்.

ஆம்புலன்ஸில் கதிரவனின் உடல் ஏற்றப்பட்டது. இன்டென்ஸிவ் கேர் யுனிட்டில் கதிரவனை வைத்து பல்வேறு மருத்துவர் முயற்சிகளில் ஈடுபட்டனர்.

தலைமை மருத்துவர் உதடு பிதுக்கினார்

மானிட்டரில் வரைகோடு படுக்கை வசமாய் நீண்டது.

"விக்டிம் இஸ் ஆல்ரெடி டெட்.. ஆல் தி ரிவைவல் ஆக்ட்ஸ் மிஸரபிலி பெய்ல்டு!"

ஆடாமல் அசையாமல் கிடந்தான் கதிரவன். அவனது உடல் நீலநிறமாக மாறியிருந்து. தலைக்கேசம் குத்திட்டு நின்றது.

"பிரேத்தை மார்ச்சுவரிக்கு அனுப்புங்கள்!"

கதிரவன் ஸ்டெச்சரில் கடத்தப்பட்டான். வலதுகால் கட்டைவிரலில் எண் அட்டை மாட்டப்பட்டது. பிரேத அறை உதவியாளன் கதிரவனின் உடலை தள்ளிக் கொண்டு பிரேத அறைக்கு கிளம்பினான்.

தள்கிக் கொண்டு செல்லும் போதே உதவியாளன் கதிரவனின் முகத்தை உன்னித்தான்.

"என்ன ஆளுய்யா நீ? செத்துப் போக நூறு வழிகள் இருந்தும் மின்னல் தாக்கி செத்துப் போயிருக்கியே! மின்னல் தாக்கியும் உன் உடம்பு கருகல பாரு! உன் மூஞ்சி அழகா தூங்ன மாதிரியே இருக்கு! டாக்டர்கள் ஒழுங்கா பாத்தாங்களா? எனக்கென்னமோ இன்னும் உனக்கு உயிர் இருக்றமாதிரியே தோணுது. பதில் சொல்லு உயிரோடதான இருக்க?"

கதிரவன் பதில் பேசவில்லை.

மார்ச் சுவரியை திறந்தான். பார்மலன் கலந்த ஜில்லிப்பு தாக்கியது. ஸ்டெச்சரிலிருந்து கதிரவனை தூக்கி விசேஷ எவர்சில்வர் கட்டிலில் கிடத்தினான். அதில் பிரேதத்தின் கழிவு வெளியேற துவாரங்கள் செய்யப்பட்டிருந்தன.

"இந்தாளு செத்ததா டாக்டர் அறிவிச்சு முப்பது நிமிஷத்துக்கு



மேலாகுது. இனிமேலா இவன் எந்திரிச்சு உக்காரப் போறான்?"

கதிரவனின் மூக்கை நிமிண்டிவிட்டான். வெள்ளை விரிப்புக்குள் கைவிட்டு கதிரவனின் ஆணுறுப்பை தொட்டு பார்த்தான். தொட்டதும் அது நீண்டமாதிரி உணர்ந்தான். பிரமை பிரமை. அக்குளில் கிச்சுகிச்சு மூட்டினான். கதிரவனின் உடலிலிருந்து எந்த அசைவும் வெளிப்படவில்லை.

"தம்பி! உனக்கும் எனக்கும் ஒரு விளையாட்டு. நான் வரிசையா பத்து மேட்டர்கள் சொல்ல போறேன். பத்து மேட்டர் பயங்கரமானவை. அவைகளை கேட்டா பிணமும் எந்திரிச்சு உக்காந்திடும்!"

பதில் இல்லை.

"ஒரு குளிக்ற தொட்டிக்குள்ள நடிகை பிபாஸா பாசு, ஐஸ்வர்யாராய், ரகசியா, லிண்டா நிர்வாணமா குளிச்சுக்கிட்டு இருக்காங்க. உன்னை தூக்கி நான் அவங்களுக்கு இடையே போடுறேன். என்ன பண்ணுவ? ஜலக்கிரீடை பண்ணுவியா இல்லை இப்டி பிணமாகவே கிடப்பியா?"

பதில் இல்லை.

"இப்பத்தான் நீ செத்துட்டல்ல. கடவுள்கிட்ட போற. கடவுள் இன்னும் உனக்கு எழுபது வருஷ ஆயுள் மிச்சமிருக்குன்னு சொல்றாரு. என்ன பண்ணுவ? அடிச்சுபுரண்டு பூமிக்கு ஓடிவருவாயா? இப்ப செத்தது செத்திட்டேன் என்னை நரகத்துக்கோ சொர்கத்துக்கோ அனுப்ச்சிருங்க கடவுளேன்னுவியா?"

பதில் இல்லை.

"என்கிட்ட செத்தவங்களை பிழைக்க வைக்ற மந்திரம் ஒண்ணிருக்கு. னீதை நான் உச்சரிக்கிறேன். ஓம் ரீம் கிரீம் ரங்ஜங்பங். உயிருடன் எழுந்து என் மந்திரம் உண்மைன்னு நிரூபிப்பாயா, அல்லது எனது மந்திரம் ஒரு உளறல்ன்னு செத்தே கிடக்கப்போறியா?"

பதில் இல்லை.

"எனக்கு அம்பது வயசாகுது. எல்லாம் அனுபவிச்சிட்டேன். என் உயிரை எடுத்துக்கிட்டு நீ உயிர்த்தெழு. உயிரிழந்த நான் பிரேதக்கிடங்கில் பிணமாய் கிடக்கிறேன்!"

பதில் இல்லை.

ஜானெக்ஷா குவார்ட்டர் பாட்டில் எடுத்து ராவாக குடித்து முடித்தான் பிரேதக்கிடங்கு உதவியாளன். ஒரு சொட்டு உற்சாக பானமெடுத்து கதிரவனின் உதட்டில் தடவி விட்டான். அசைவில்லை.

வெள்ளைத்துணியை விலக்கி நிர்வாண கதிரவனை தனி எடுத்தான். தலைகீழாய் பிடித்து பார்த்தான் பின் படுக்க வைத்து மார்புக்கூட்டில்,

மணிக்கட்டில் காது வைத்து டிக்டிக் கேட்கிறதா என ஆராய்ந்தான்.

"எந்திரிய்யா!"

"............"

"எந்திரிக்க மாட்டியா? கல்யாணம் பண்ணாம கன்னிப் பையனா செத்திருக்க. எனக்கு அதை ஜீரணிக்க முடியல. அதனால நான் ஒரு முடிவுக்கு வந்திட்டேன்!"

"............"

"என்ன முடிவுன்னு நீ கேக்கமாட்டல்ல. சரி, நானே சொல்றேன். ஏற்கனவே கல்யாணமாகாத கன்னிப் பொண்ணு ஒருத்தியோட பாடி இங்க இருக்கு. கன்னி பையன் பிணத்துக்கும் கன்னிபொண்ணு பிணத்துக்கும் கல்யாணம் பண்ணி வைச்சிடுறேன். ஆவி உலகத்து போய், தேனிலவு கொண்டாடுங்க. என்ன பாக்கற...கல்யாணம்னு சொல்றானே... தாலி கயித்துக்கு எங்க போவேன்னு பாக்றியா? தோ பாக்கட்ல ரெடிமேடா ஒரு மஞ்சக்கயிறு வச்சிருக்கேன். இத்தைப் பிடி. அந்தப் பொண்ணு பாடிய காட்ரேன். கட்டு!"

தாலிக் கயிற்றைக் கதிரவனின்வலதுகையில் வைத்தான். பின் அதனை எடுத்தான். இப்ப நான் வாயாலயே பீப்பி...டும்...டும்... பண்ணிக்கிட்டு உன் சார்பா

"நடிகை ரக்ஷி சாவந் ரயில்வே அமைச்சர் லல்லு பிரசாத் யாதவ்வின் ரசிகையாம். மனீஷா, ஷில்பா ஷெட்டி 'பூஜா பட்', ஆகியோரும் தங்களை லல்லு பிரசாத் யாதவ்வின் ரசிகைகள் என்று சொல்லிக் கொள்கிறார்கள்.

– க. ரவீந்திரன்





அவளுக்கு தாலியகட்றேன். தாலிக்கயிற்றை எடுத்துக் கொண்டு பெண்ணின் பிரேதக்துக்கு ஓடினான். "கன்னி! மூஞ்சில சிரிப்ப பாரு... நல்ல மாப்பிளை உனக்கு பாத்ருக்கேன் பார்த்தியாசு" தாலியை பெண்ணின் பிரேதத்தின் கழுத்தில் கட்டப்போனான்.

சிறு இருமல் சிறு செருமல் சப்தம் எழுந்தது.

புருவங்கள் முடிச்சிட சுழன்று திரும்பினான் உதவியாளன். "யாருப்பா இந்த மேரேஜை அப்ஜக்ட் பண்றது"

இப்போது இருமலின் ஒலியன் கூடி ஒலித்தது.

விக்கித்துப் போனான் உதவியாளன். சப்தம் கதிரவனின் பக்கமிருந்துதான் வந்தது. கதிரவனின் பிரேதம் நோக்கி ஓடினான். கதிரவனின் உடல் மெலிதாய் நடுங்கிக் கொண்டிருந்தது. கதிரவனின் விழிகள் மெதுவாகத் திறந்தன.

கதிரவனின் வாய் எதனையோ உச்சரிக்க பல முறை முயன்று ஜெயித்தது. "நா எங்க இருக்கேன்?"

'உறக்'! பிரேத அறை உதவியாளின் இதயம் ஒரு நொடி நின்று துடித்தது.

"நா பின் இதயம் வாய்க்கு வர யத்தனித்தது. இரத்த அழுத்தம் தாறுமாறாய் எகிறியது."

"நீ...நீ...எப்படி... உயிரோட?"

" நான் இறக்கல. நான் உயிரோடதான் இருக்கேன். நீ என்ன பண்ணிக்கிட்டுருக்கே? உன் கையில என்ன தாலி போ. போய் டாக்டர்களை கூட்டி வா!"

பிரேதக்கிடங்கு உதவியாளன் தலைதெறிக்க ஓடினான். "பிணம் பேசுது பிணம்"பேசுது பிணம் பேசுது!"

அடுத்த சில நிமிடங்களில் அந்த மருத்துவ வளாகமே அல்லோலகல்லோலப்பட்டது.

## 3

தீவிர சிகிச்சை பிரிவு.

கதிரவன் கிடத்தப்பட்டிருந்தான். அவனது முழு உடலும், தலையும், மூளையும் இதயமும் ஸ்கேன் செய்யப்பட்டிருந்தன. அவனுடைய இரத்தம் எடுத்து பரிசோதிக்கப்பட்டிருந்தது.

கதிரவனைச் சுற்றி பத்துக்கும் மேற்பட்ட மருத்துவர்களும் இரு செவிலியர் நங்கைகளும் நின்றிருந்தனர்.

"திஸ் இஸ் எ மெடிக்கல் மிரகிள். என்னுடைய 45 வருட

அனுபவத்ல இப்டி ஒரு கேஸை நான் சந்திச்சதே இல்லை. கதிரவனின் மூளை செல்கள் பெரிய அளவில் பாதிக்கப்படவில்லை. இதயத்தின் ஒரு சிறுபகுதி பாதிக்கப்பட்டுள்ளது. நாடித்துடிப்பிலும், இதயத் துடிப்பிலும் ஒழுங்கின்மை காணப்படுகிறது. இன்னும் ஒரே மாதத்தில் கதிரவன் இயல்பு நிலைக்கு மீண்டு விடுவார்."

"டாக்டர்! நோயாளி சுமார் 40 நிமிடங்கள் பிரேதமாய் கிடந்திருக்கிறார். நோயாளியின் உயிர் நோயாளியை விட்டு வெளியேறி போய்விட்டு நாற்பது நிமிடங்களுக்கு பின் மீண்டும் நோயாளியின் உடலுக்கு திரும்பியுள்ளதா? அல்லது நோயாளி தீவிர சுவாசமில்லாத ஹைபர்னேஷன் (குளிர்நிலை தூக்கம்) நிலையில் இருந்துவிட்டு இயல்பு நிலை திரும்பியுள்ளாரா? நாற்பது நிமிட இடைவெளியில் ஆக்ஸிஜன் இல்லாமல் மூளை மரணமடைந்து விடும். இயங்காத இதயத்தின் உட்சுவர்களில் இரத்தம் உறைந்து விடும்."

"நமது எல்லா கேள்விகளுக்கும் பதில் உடனே கிடைத்து விடாது. பொறுங்கள்.... மிஸ்டர் கதிரவன்! ஆர் யு ஹியர் மி."

"யெஸ் டாக்டர்!"

"உங்களை மின்னல் தாக்கியதும் உங்களுக்கு என்ன நடந்தது?"

"தாக்கிய கணம் நினைவிழந்தேன் டாக்டர். ஆனால எனது உடலை மருத்துவமனைக்கு கொண்டு செல்லும்போது எனது சூட்சும உடல் ஸ்தூல உடலை விட்டு பிரிந்தது. நான் தனியே மிதந்தேன். கீழே மருத்துவ உதவிகள் செய்யப்படும் எனது உடலைப் பார்த்தேன். பின் ஒரு பிரளய வெளிச்சத்தை நோக்கி பறந்தேன். அந்த வெளிச்சம் ஒரு பெண்ணின் வடிவத்தில் விஸ்வரூபித்து நின்றிருந்தது. அதற்கு எண்ணிலடங்காத கைகள். ஒரு கையில் இடி, மின்னல், மழை. ஒரு கையல் வெயில். ஒரு கையில் உறைபனி. ஒருகையில் காற்று புயல், சூறாவளி. வெளிச்சம் எனது சூட்சம உடலின் இருதய பகுதியை தடவிக்கொடுத்து எனது காதில் எதனையோ கூறியது. மீண்டும் திரும்பிப் பறந்தேன். மாச்சுவரிக்குள்ளிருக்கும் எனது ஸ்தூல உடம்புக்குள் போய்ச் சேர்ந்தேன். அவ்வளவுதான்!

"அவுட் ஆஃப் பாடி எக்ஸ்பீரியன்ஸ்... ஓ.கே. மிஸ்டர் கதிரவன்! நாங்க உங்களை போகச் சொல்றவரைக்கும் நீங்க எங்க கண்காணிப்பில் இருக்க வேண்டிவரும் ஒத்துழைப்பீர்களா?"

"ஒத்துழைக்கிறேன் டாக்டர்!"

பல்வேறு மருத்துவ பரிசோதனைகளுக்கு பின் கதிரவன் கண்காணிப்பு பிரிவில் அனுமதிக்கப்பட்டான்.

செவிலியர் நங்கை நளினி உட்பட்டாள். "குட்மார்னிங் மிஸ்டர் கதிரவன்!"



"குட்மார்னிங் சிஸ்டர்!"

கதிரவனுக்கு மருத்துவ பரிசோதனைகள் செய்து உடலை சுத்தப்படுத்தி ஓட்ஸ் கஞ்சி புகட்டினாள்.

"நீங்க மிகமிக அதிர்ஷ்டக்காரர் கதிரவன்!"

"எப்படி?"

"உங்களை மின்னல் தாக்கியிருக்கிறது. ஆனால் உங்க உடலில் எவ்வித ரேடியேஷன் பாதிப்பும் இல்லை. உங்க உடலின் புறத்தோலின் எங்குமே உஷ்ணப்பாதிப்பு இல்லை. நிறம் சற்று நீலமாய் மாறியுள்ளீர்கள்."

முறுவலித்தான்.

"உங்களுக்கு Chaos Theory தெரியுமா?"

"தெரியாது சிஸ்டர்!"

"உலகின் எங்கோ நடக்கும் மிக நுண்ணிய மாற்றம் (தட்பவெப்பமாற்றமும்) கூட உலகின் எல்லாவற்றையும் பாதிக்கிறது. மாற்றம் எவ்வளவு தூரத்தில் நடந்தாலும் சரி. உங்களின் தப்பிப்பு பூமியின் இயல்பை எந்தவிதத்தில் பாதித்ததோ? மே பி பாஸிடிவ்!"

"சிஸ்டர்! பௌதீகத்தை ஆழமாக படித்துள்ளீர்கள் போல..."

"நான் ஒரு புத்தகப்புழு கதிரவன். உங்களுக்கு இன்னொரு தியரிபற்றி சொல்ல விரும்புகிறேன். டு யூ நோ பிராபபிலிட்டி தியரி?"

"ஒரு நாணயத்தை பத்து தடவை சுண்டினா சாதாரணமாக ஐந்து தடவை தலையும் ஐந்து தடவை பூவும் விழும். பத்து தடவையும் தலை பத்து தடவையும் பூ விழுதல் இரு எதிர் எதிர் முரண்கள். உலகில் நடக்கும் எல்லா விஷயங்களையும் பிராபபலிட்டி தியரிக்கு கீழ் கொண்டு வந்துவிடலாம். இதுதானே அந்த தியரி?"

"யெஸ்... யூ ஆர் கரெக்ட் கதிரவன்... பிராபபலிட்டி தியரி பிரகாரம் ஒரு மனிதனை இடியோ மின்னலோ தாக்க அவன் குறைந்தபட்சம் ஒரு லட்சத்தி எழுபதாயிரம் வருஷம் உயிர்வாழ்ந்தாக வேண்டும். ஆனால் உங்களின் 28வது வயதிலேயே மின்னல் உங்களை தாக்கியிருக்கிறது. ஸோ, உலகில் நடக்கும் எத்தனையோ விஷயங்கள் பிராபபலிட்டி தியரியை ஏறக்குறைய கொன்றுவிட்டன!"

"அப்படி சொல்ல முடியாது சிஸ்டர்... இயல்பு ஒவ்வாத விஷயங்கள் உலகம் தோன்றிய நாளிலிருந்து நடந்து கொண்டுதான் வருகின்றன. மருத்துவ அற்புதங்களுக்கு உலகியல் குழப்பங்கள் ஒரு காரணமல்ல!"

எதிர்மறையாய் தலையாட்டினாள் நளினி.

"நான் உங்க கருத்துகளிலிருந்து மாறுபடுகிறேன் கதிரவன். சிதம்பரம் நகரின் ஜனத்தொகை என்ன தெரியுமா உங்களுக்கு?"

"சிலபல லட்சங்கள்!"

"அந்த சிலபல லட்சங்களில் எத்தனைபேர் இடி, மின்னலால பாதிக்கப்பட்டிருப்பர் என நினைக்கிறீர்கள் கதிரவன்?"


"என்னைத் தவிர யாரும் இருக்க முடியாது!"

"யூ ஆர் ராங் கதிரவன்... கடந்த இரண்டு வருடங்களில் இடி மின்னலால் தாக்கப்பட்ட சிதம்பர மக்கள் 168 பேர்... அதில் 48 பேர் ஸ்தலத்திலேயே மரணமடைந்து விட்டனர். மீதி 120 பேர் காயங்களுடன் தப்பித்துள்ளனர். பிழைத்துக்கொண்ட 120 பேரில் 60 ஆண் 60 பெண். இறந்து போன 48 பேரில் 24 ஆண், 24 பெண்."

"மீ காட்!"

**"கடந்த மூன்று ஆண்டுகளாக ஒரிஸாவில் நோயினாலும் விபத்துக்களாலும் சமூக விரோதிகளாலும் சுமார் 200 யானைகள் மடிந்துள்ளனவாம்.**

– க. ரவீந்திரன்





"இன்னொரு சுவாரஸ்யமான புள்ளிவிபரம் கூறுகிறேன். இடி மின்னலால் தாக்கப்பட்ட அனைவருமே திருமணமாகாத வாலிப வயதினர்!"

"இதிலிருந்து என்ன சொல்ல வருகிறீர்கள் சிஸ்டர்?"

"உலகம் தோன்றிய நாளிலிருந்து இவ்வகை முரண்பாடுகள் அரங்கேறி வருவதாக நான் நம்பல, சம்திங் ராங்."

"நிறைய அமானுஷ்ய கதைகள் படிச்சு விசித்திரமா யோசிக்கிறீங்க சிஸ்டர்!"

"நோ. லைப் இஸ் ஸ்ட்ரேன்ஜர் தேன் பிக்ஷன். இன்னொரு தகவல் கூறுகிறேன். இடிமின்னல் தாக்கி உயிர் பிழைத்தோர் சிதம்பரத்தில் ஒரு சங்கம் வைத்திருக்கிறார்கள். அந்த சங்கத்தின் பெயர் 'மின்னல்தாக்கி பிழைத்தோர் குழுமம்."

"எங்கிருக்கிறது?"

"முத்தையா நகரில் இருக்கிறது!"

"அதில் உறுப்பினராக என்ன செய்ய வேண்டும்?"

"அவர்கள் வாராவாரம் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு கூடுகிறார்கள். நீங்க முதல் தடவை போனாலே அக்குழுமத்தின் ஆயுள் உறுப்பினராக விடுவீர்கள். உறுப்பினர் கட்டணம் ஏதுமில்லை."

"அக்குழுமத்தின் தலைவர் யார்?"

"தலைவர் இல்லை தலைவி. பெயர் ஜெபமாலை."

"அக்குழுமத்தில் சேர்வதிலும் ஒரு ஆபத்து இருக்கிறது. அதனை சொல்லாமல் இருக்க முடியவில்லை!"

"அது என்ன?"

"வாராந்திர கூட்டம் நடக்கும்போது ஒட்டுமொத்த உறுப்பினர்களையும் குறி வைத்து இருமுறை இடிமின்னல் தாக்கியிருக்கிறது!" ஸ்தம்பித்தான் கதிரவன்.

## 4

முத்தையா நகர் நான்காவது குறுக்குத் தெரு.

ஒரு பங்களாவின் வெளிவாசலில் 'மின்னல் தாக்கி பிழைத்தோர் குழுமம்' எனும் போர்டு நிமிர்ந்து நின்றிருந்தது.

ஓட்டிவந்த காரிலிருந்து இறங்கினான் கதிரவன். ஏற்கனவே அங்கு நான்கு சக்கர, இரண்டு சக்கர வாகனங்கள் வந்து நின்றிருந்தன.

தயக்கமாய் உள்ளே நடந்தான். உள்ளே கூட்ட அறையில்

நாற்பதுக்கும் மேற்பட்டோர் அமர்ந்திருந்தனர்.

25 வயது மதிக்கத்தக்க ஓர் அழகிய யுவதி கைகட்டி நின்றிருந்தாள். புதியவன் ஒருவன் உள்ளே வருவதைப் பார்த்ததும் அவனை வரவேற்கும் விதமாய் முகபாவம் அமைத்து திரும்பினாள்.

"வணக்கம் மேடம்!"

"வணக்கம்!"

"நான் கதிரவன். வங்கி மேலாளர். இரு வாரங்களுக்கு முன் மின்னல்தாக்கி உயிர் பிழைத்தவன் நான்தான்."

"எனது பெயர் ஜெபமாலை. கத்தோலிக்க் கிறிஸ்டியன். ம்யூஸிக் டீச்சர். இந்த குழுமத்தின் தலைவி!"

"உங்களை சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி!"

"கூட்டம் ஆரம்பிக்க இன்னும் 15 நிமிடங்கள் ஆகும். இருக்கையில் சென்று அமருங்கள் கதிரவன்!"

சென்று அமர்ந்தான். பத்து நிமிடங்களில் நூறு உறுப்பினர்கள் வந்து சேர்ந்து விட்டனர். கூட்டம் ஆரம்பித்தது.

ஜெபமாலை பேச ஆரம்பித்தாள். "ஹாய் ப்ரண்ட்ஸ் என் பெயர் ஜெபமாலை. மின்னல் தாக்கி பிழைத்தவர்களில் நானும் ஒருத்தி. போன வருடம்தான் மின்னல் என்னை தாக்கியது. மின்னல்களில் பல வகை உண்டு. பீன்ஸ் வடிவ மின்னல்களும் உண்டு. ஒரு வீடு சைஸ் மின்னல்களும் உண்டு. என்னைத் தாக்கிய மின்னல் சூரிய வெளிச்சத்தை விட ஐந்து மடங்கு அதிக வெப்பத்தை உமிழ்ந்தது. நூற்றியைம்பது கிலோ மீட்டர் நீளமுள்ள மின்னல்களும் உண்டு. மின்னல் மனிதர்களை சிலநேரம் அலையடிக்கிறமாதிரி தாக்கும். சில நேரம் அதிக வோல்ட் மின்சாரத்தை செலுத்தி கொல்லும். சில நேரம் தாக்கி காது கேட்கும் சக்தியையும் பார்க்கும் திறனையும் பறித்து விடும். நானும் எனது நான்கு தோழிகளும் சுற்றுலா சென்றிருந்தோம். கேம்ப் பயர் நிகழ்ச்சியில் நாங்கள் கைகோர்த்து ஆடிக் கொண்டிருக்கையில் மின்னல் எங்களை தாக்கியது. தாக்கியதில் எனது நான்கு தோழிகளும் சம்பவ இடத்திலேயே இறந்து போயினர். கடுமையான மின் அதிர்ச்சி பெற்ற நான் சொற்ப சுயாங்களுடன் தப்பினேன். மின்னல் தாக்கிய பிறகு எனக்கு சிவப்பு வர்ணம் மட்டும் தெரியவில்லை. எப்போது மழை பெய்வது போல் வானம் கறுத்தாலும் எனக்கு பதட்டமாகிவிடும். இந்த குழுமம் ஆரம்பித்தவுடன் தான் இயல்பு நிலை மீண்டுள்ளேன்."

இன்னொரு வாலிபர் எழுந்து பேச ஆரம்பித்தார், "எனது பெயர் சண்முகராஜன. டெண்டல் டெக்னஷியனாக பணிபுரிகிறேன். மின்னல் தாக்கிய பிறகு நான் ஹைப்பர் செவலாக மாறியுள்ளேன்.



மின்னல் என்னை தாக்கி லட்சம் வயாக்ரா மாத்திரைகளை எனக்குள் புகட்டிவிட்டது. பொங்கி எழும் ஆண்மையை கட்டுபடுத்த வழிவகை தெரியாமல் தவிக்கிறேன்.!"

"ஹாய் பிரண்ட்ஸ். எனது பெயர் விஷ்வா. ஹோட்டல் நடத்துறேன். என்னை மின்னல் தாக்கிய பிறகு நான் ஏறக்குறைய மலடாகி விட்டேன். திருமணம் செய்து கொள்ள பயமாயிருக்கிறது."

"ஹாய் பிரண்ட்ஸ். எனது பெயர் சங்கீதா. என்னை மின்னல் தாககிய பிறகு எனது உடல் சூடு பலமடங்காய் அதிகரித்துள்ளது. (வாயில் சிறிது தண்ணீரை அடக்கி வைத்து வெளியே துப்புகிறார். அது கொதிக்கம் நீராய் ஆவி பொங்க வெளியேறுகிறது.) நான் யாரையும் முத்தமிட்டால் நான் முத்தமிட்ட இடம் கருகி போகிறது."

"ஹாய் பிரண்ட்ஸ். எனது பெயர் ஸாம். மின்னலை யாரும் உயிரில்லாத ஒரு சக்தி என நினைத்து விடாதீர்கள். மின்னலுக்கு ஆக்டோபஸ் போன்று எட்டு திசை பாயும் மின்சாரக்கைகள் உண்டு. பூமியின் ஆரத்தை விட்டத்தை ஒரே காலடியில் தாண்டும் பத்தாயிரம் கிலோமீட்டர் நீளமுள்ள கால்கள் உண்டு. மின்னல்களுக்கு யானை போல் பழிவாங்கும் குணம் உண்டு. மின்னல் பெண்தன்மை உடையது. இடி ஆண்தன்மை உடையது. Lightning are predators. They are hounding on Mankind in a merciless way"ஹாய் பிரண்டஸ். எனது பெயர் மனோகரன். மின்னலை வெல்ல நம்மிடம் எந்த உபாயமும் இல்லை. நம்மின் தப்பித்தல் தற்காலிகமானது.

எல்லாரின் அனுபங்களையும் கேட்டு முடித்தான் கதிரவன். எழுந்து தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு தனது மின்னல் அனுபவத்தை விவரித்தான்.

கூட்டம் முடிந்தது.

ஜெபமாலையும் கதிரவனும் தனித்து விடப்பட்டனர். இப்போது ஜெபமாலையை முழுமையாக பார்த்தான். மாநிறம். உயரம் 165 செ.மீ . ஏன்ஜலினா ஜோலி போல் கனத்த உதடுகள் கனத்த மார்பகங்கள் பார்க்க பார்க்க திகட்டாத அழகு. மெய்மறக்க செய்யும் அழகு. உறுப்பினர் ஒருவர் மின்னலை பெண் என்றார். பெண்ணுக்கு பெண் பொறாமை கொண்டு ஜெபமாலையை தாக்கியதோ?

"மின்னல் எனனை தாக்கியதற்கு மிகமக வருத்தப்பட்டேன். இப்போது சந்தோஷப்படுகிறேன்!"

"எதற்காக சந்தோஷம்?"

"இல்லையென்றால் அழகான உங்களை சந்தித்திருக்க முடியுமா?" அழகாக சிரித்தாள் ஜெமாலை. சிரிப்புக்கு அவளது மார்பகங்கள் மெதுவாக அதிர்ந்தன.

"எந்த பெண்ணை சந்தித்தாலும் இதனை போன்ற ரெடிமேட் வார்த்தைகளை அள்ளி விடுவீர்களா கதிரவன்?"

"இல்லை, உங்களுக்கு உங்களுக்கே மட்டுமான பிரத்தியேக வார்த்தைகள் இவை. மருத்துவமனையில் ஒரு நர்ஸ் கெயஸ் தியரி பற்றியும் பிராபபிலிட்டி தியரிபத்தியும் பேசிச்சு. கெயஸ் தியரி உண்மைதான் போல. என்னை மின்னல் தாக்கியதின் விளைவு நம் சந்தித்தல் போதும்!"

"நானும் உங்களை சந்தித்ததில் மிக மகிழ்ச்சியடைகிறேன்!"

நாம் அடுத்து எங்கு சந்திப்பது?"

"பேசலாமா...."

"பிரத்யேகமாக நாம் பேசக் கூடாதா....?"

"வாராந்திர கூட்டங்களில் தான்!"

"நாம் உலாதொலைபேசி எண்களை பரிமாறிக் கொள்ளலாமா?"

தயங்கினாள்.

"உங்களுக்கு விருப்பமில்லாட்டி வேண்டாம்!"

இருவரும் உலாதொலைபேசி எண்களை பரிமாறிக் கொண்டனர். ஜெபமாலையின் எண்ணை தொடர்பினான். ஜெபமாலையாயின் உலாதொலைபேசியிலிருந்து இன்னிசை வழிந்தது.

"நான் புறப்படுகிறேன் ஜெபமாலை!"

"ஓகே!"

காருக்கு நடந்தான்.

அடுக்குமாடிக் குடியிருப்பின் தரைத்தளத்து கார் நிறுத்துமிடத்தில் காரை நிறுத்தி இறங்கினான்.

தனது குடியிருப்பின் கதவைத் திறந்தான். பூனை வெருண்டோடியது. இரவு உணவுக்காக சப்பாத்தி தயாரிக்க ஆரம்பித்தான்.

உலாதொலைபேசி சிறுங்கியது.

நிச்சயம் ஜெபமாலையாகத்தான் இருக்கும்.

பாய்ந்து எடுத்து காதில் இணைத்தான். "நீங்க பேசுவீங்கன்னு, எனக்கு தெரியும் ஜெபமாலை!"

"நான் ஜெபமாலை இல்லை நளினி!"

"எந்த நளினி?"

"ஆண்கள் நன்றி இல்லாதவரகள் என நிரூபித்து விட்டீர்களே... இரண்டு வாரம் பக்கத்திலேயே இருந்து உங்களை கவனித்துக் கொண்டேனே... என்னை மறந்து விட்டீர்களா?"

"நர்ஸ் நளினியா? ஸாரி ஸாரி!"

"அது இருக்கட்டும். நான்தான் உங்களுக்கு மின்னல் தாக்கி பிழைத்தோர் குழுமத்தை சிபாரிசு செய்தேன். போன அன்றே



ஜெபமாலை மீது காதலாகி விட்டீர்களா?"

"இ... இல்லை..." "ஒரு ஆபத்து இன்னொரு ஆபத்தை விலை கொடுத்து வாங்குகிறது!"

"என்ன சொல்றீங்க நளினி?"

"மின்னல்தாக்கி பிழைத்த ஆணும் மின்னல்தாக்கி பிழைத்த பெண்ணும் காதலித்தால் அவர்கள் மின்னலால் தாக்கப்பட்டு இறக்கும் சாத்தியம் இரட்டிப்பாகிறது இல்லையா கதிவரன்?"

"மைட் பி ஆர் மைட் நாட் பி!"

"ஜெபமாலையை பார்த்தவுடன் காதல்வயப்பட்ட நீங்கள் என்னை பார்த்ததும் காதல்வயப்பட வில்லையா?"

"நர்ஸ் பணி புனிதமானது. நர்ஸ்பணி புரியும் பெண்களை தவறான எண்ணத்துடன் பார்க்கக் கூடாது நளினி!"

"நர்ஸ்களுக்கும் இதயம் உண்டு கதிரவன். நானும் எத்தனையோ அழகிய ஆண்களை கடந்து வந்திருக்கிறேன். அப்போதெல்லாம் தோன்றாத எண்ணம் உங்களை பார்த்தும் வந்துவிட்டது. ஐ லவ் யூ கதிரவன்!"

"ஐ டோன்ட் லவ் யூ நளினி!"

"என்னை சீருடையில் பார்த்ததால் என் வளைவு–நெளிவு–சுளிவு–குழிவுகள் உங்களுக்கு தெரியவில்லை போல. நான் ஜெயமாலையின் அழகுக்கு சற்றும் குறைந்தவளல்ல கதிரவன்!"

"நான் ஜெபமாலையை காதலிப்பதாக கூட இன்னம் சொல்லவில்லை நளினி. இது பற்றி இன்னொரு நாள் விரிவாக பேசுவோம் நளினி!"

"எது எப்படியிருந்தாலும் ஐ வாண்ட் டு சஜஸ்ட் யூ.... நான் மின்னல்களை பற்றி அதிகம் ஆராய்ந்து வைத்துள்ளேன். உங்களை ஆயுளுக்கும் மின்னலின் தாக்குதலிலிருந்து பாதுகாக்க என்னிடம் பல ரகசிய திட்டங்கள் இருக்கின்றன. எந்த நொடியிலும் உயிரை பறிக்கக்கூடிய ஜெபமாலை வேண்டுமா, அல்லது நிரந்தரமாய் உயிரை பாதுகாக்கக் கூடிய நளினி வேண்டுமா என்று யோசிங்க கதிரவன். குடநைட். ஹாப்பி ட்ரீம்ஸ், கனவில் நான் வருவேன்!" எதிர்முனை மௌனித்தது.

நளினி இன்னொரு மின்னலாய் தாக்குகிறாளே!

இம்முறை கதிரவன் ஜெபமாலையை தொடர்பினான். இரு முறை முயற்சித்த பிறகு தொடர்பு கிடைத்தது.

"ஹாய் ஜெமாலை!"

"சாயங்காலம் தானே பேசினோம்... அதற்குள் மீண்டுமா? கார்டு போட்டு கட்டுப்பட்டியாகலேன்னு உங்க மனைவி திட்டப்

போறாங்க!"

"எனக்கு இன்னும் கல்யாணமே ஆகல!"

"நான் இந்த தகவலுக்காக முந்தைய கேள்வியை கேட்வில்லை."

"உங்ககிட்ட பேசுறதுக்கு முன்னாடி ஒரு இன்கம்மிங் கால் வந்தது. நீங்கன்னு நினைச்சு 'நீங்க பேசுவீங்கன்னு தெரியும் ஜெபமாலை'-ன்னு உளறிட்டேன். பேசினது நர்ஸ் நளினி. அந்தப் பொண்ணு என்னை காதரிக்குதாம். அதனால நான் உங்களை காதலிக்கக் கூடாதாம். நாம் இருவரும் இணைந்தால் மின்னலால் இரட்டிப்பு ஆபத்தாம்."

"இந்த ஆண்டு THE INHERITANCE OF LOSS என்ற நாவலுக்கு புக்கர் பரிசைப் பெற்ற 35 வயதான கிரண் ராய் அப்பரிசைப் பெற்ற பெண்களிலேயே மிகவும் குறைந்த வயதானவர். இப்பரிசைப் பெறுகின்ற மூன்றாவது இந்தியர். இதற்கு முன்பு சாலமன் ருஷ்டி, அருந்ததிராய் ஆகியோர் முறையே 1981 மற்றும் 1997 இல் அப் பரிசைப் பெற்றனர். இவரது தாயார் அனிதா தேசாய் (வயது 69) இப்பரிசுக்காக மூன்று முறை பிரேரிக்கப்பட்டும் பரிசு கிடைக்காதவர், மகளுக்கு பரிசு கிடைக்காவிட்டால் அதைத் தன்னால் எதிர்கொள்ள முடியாது என்பதால் அவர் போட்டி நடைபெறுகின்ற இடத்திற்கு செல்லவில்லையாம்பரிசுத் தொகை 50,000 பவுண்டுகள். புத்தகத்தை தயாருக்கு அர்ப்பணித்துள்ளார் மகள்.



– க. ரவீந்திரன்



"நான் உங்களைக் காதலிக்கல. ஏன்னா நான் காதலை நம்புவதே இல்லை. காதல் காமத்தின் மாறுவேஷம். எனக்கு உங்களை தெரியும் உங்களுக்கு என்னை தெரியும் வெறும் பரிட்சயம் தட்ஸ் ஆல். காதல் கத்திரிக்கா எல்லாம் இல்லை. நம் பரிட்சயத்தை வெளியில் காதலாய் காட்டும் வித்தைகளை விட்டு விடுங்கள். ஐ ஹேட் திஸ் டர்ட்டி ட்ரிக்ஸ்.!"

"ஸாரி ஜெபமாலை!"

"ஒன் மோர் திங் கதிரவன்!"

"சொல்லுங்க!"

"நர்ஸ் நளினி சொன்னது உண்மைதான். நான் துரதிர்ஷ்டத்தின் மகள். நளினியோ அதிஷ்டத்தின் மகள். அவள் ஒரு ஜீனியஸ். மாஸ்டர் ஆஃப் ஆல் சப்ஜக்ட்ஸ். மனசை அங்க இங்க அலையவிடாம பேசாம அவ காதலை ஏத்துக்கிட்டு வாழ்க்கைல செட்டில் ஆய்டுங்க!"

"நீங்க என் காதலை மறுக்கலாம்–அது உங்க அடிப்படை உரிமை. ஆனா காதலில் நம்பிக்கை இல்லாத நீங்க இன்னொருத்தியின் காதலை எனக்கு சிபாரிசு செய்ய வேண்டாம். நளினியின் காதலை ஏத்துக்கிறதும் ஏத்துக்காததும் என்னுடைய அடிப்படை உரிமை. எனி ஹௌ குட் நைட் ஜெபமாலை!"

உலாதொலைபேசியை மௌனமாக்கி விட்டு கதிரவன் முணுமுணுத்தான். "அடைந்தால் ஜெபமாலை அடையாவிட்டால் மரணமாலை!"

மின்னல் கெக்கலிப்பாய் சிரித்தது. தனது நீள்நாக்கை பூமி உருண்டை மீது சொடுக்கி சில உயிர்களை சுருட்டி விழுங்கியது.

"இரைகளே! காதல் விளையாட்டா விளையாடுகிறீர்கள்? ஆடுங்கள் ஆடுங்கள்.... ஹெஹ்ஹ ஹெஹ்ஹேஹ!"

## 5

ஐஸிஐஸிஐ வங்கி கிளை.

குளிர்பதன மூட்டப்பட்ட சதுரக்கண்ணாடி அறையில் அமர்ந்திருந்தான் கதிரவன். தனக்கு முன்னிருக்கும் கணினியின் திரையில் ஓடும் தகவல்களை உன்னித்தான்.

அறைக்கதவு நளினமாக தட்டப்பட்டது.

"யெஸ்... கம்மின்!"

கதவைத்திறந்து, ஜெபமாலையும் இன்னொரு யுவதியும் உட்பட்டனர்.

"குட்மார்னிங் சார்..."

ஜெபமாலையைப் பார்த்ததும் கண்கள் அகட்டினான் கதிரவன். "குட்மார்னிங் குட்மார்னிங்!" உட்கார இருக்கைகளை சுட்டினான். இருவரும் எதரில் அமர்ந்தனர்.

"ஒரு நிமிஷம்!" என்றபடி அலுவலகப் பணிகளை கவனிப்பது போல நடித்தபடி ஜெபமாலையை அங்குலம் அங்குலமாக ரசித்தான். அவனது கண்களின் திருட்டுத்தனத்தை உளவறிந்தாள்.

சுமார் பத்து நிமிடங்களுக்குப் பிறகு. "இப்பச் சொல்லுங்க.. நானென்ன உங்களுக்கு பண்ணணும்?"

"இவள் என் தோழி.... பிடிஎஸ் முடிச்சிட்டு எம்டிஎஸ் பண்ணிட்ருக்கா.... பேரு மஞ்சுளா. சிதம்பரத்துல டெண்டல் கிளினிக் வைக்க விரும்பறா. அதுக்கு லோன் வேணும் சார்..."

"சிதம்பரத்ல ஏற்கனவே நூத்துக்கணக்கான டெண்டல் கிளினிக்ஸ் இருக்கு. ஒன்றிரண்டைத் தவிர மற்றவை ஈ ஓட்டிக்கிட்டுருக்கு...."

"இவளுக்கு கைராசியும் அதிகம் முகராசியும் அதிகம்... இவ கிளினிக் வச்சு நிச்சயம் ஜெயிப்பா!"

சிரித்தான் கதிரவன். "உங்க சர்ட்டிபிகேட்ஸ் போதாது... உங்க மாத சம்பாத்தியம் என்ன? லோனுக்கு பிலஜ் பண்ண உங்க கிட்ட என்ன சொத்திருக்கு? உங்களுக்கு யாரு ஜாமீன்தாரர் லோன் எவ்வளவு வேணும்?"

மஞ்சுளா வாய் திறந்தாள். "ஒரு சீனியரோட கிளினிக்ல தற்காலிகமாக வொர்க் பண்றேன். மாசம் நாலாயிரம் ரூபாய் கிடைக்குது. பிலஜ் பண்ண எங்கிட்ட எந்த சொத்தும் இல்லை. எனக்கு ஜாமீன்தாரர் வேற யாரு... ஜெமாலைதான். ஜெமாலை மாசம் இருபதாயிரம் ரூபா சம்பளம் வாங்கறா!"

"லோன் எவ்வளவு தேவைப்படுது?"

"அஞ்சு லட்ச ரூபாய் சார்!"

"கிளினிக் வைக்க இடம் பாத்துட்டீங்களா? டெண்டர் கருவிகள் வாங்க கொட்டேஷன்ஸ் வாங்கிட்டீங்களா?"

"இன்னும் எதுவும் இல்லை சார்!"

"மிஸ் ஜெபமாலை? வங்கி விதிகளின் படி இவங்களுக்கு லோன் கொடுக்க முடியாது!"

"இதுக்குத்தான் உங்களை நாங்க தேடி வந்தோமா?"

"வங்கி விதிமுறைகளை மீற முடியுமா?

"கிளம்பு மஞ்சு... இவரு ரொம்ப ரூல்ஸ் பேசராரு..." எழுந்தாள் ஜெபமாலை. "அவசரப் படாதீங்க. லோன் கேட்கறது நீங்களா, நானா... லோன் வாங்க வந்த நீங்கள் தான் பவ்யம் காக்கனும்!"

"பவ்யம்ன்னா உங்க காலடில நாங்க ரெண்டுபேரும் கைகட்டி



உட்கார்ந்து 'லோன் தாங்க அய்யா! லோன்தாங்க சார்! லோன்தாங்க எஜமானே!-ன்னு கெஞ்சனுமா?"

"அப்படி நினைச்சு பாத்தா தித்திப்பாகத்தான் இருக்கு. நீங்க சொன்னதை அப்படியே புரட்டிப்போட்டு பாருங்க.... நான் உங்க ரெண்டு பேர் காலடிலயும் கைகட்டி உக்கார்ந்து தயதுசெய்து லோன் வாங்கிட்டு போங்கம்மா.... எஜமானிகளம்மா.....மேடம்ஸ்'-ன்னு கெஞ்சனும்னு எதிர்பார்க்கிறீங்களா?"

"வங்கி மேனேஜர்னா உங்களுக்கெல்லாம் கடவுள் மாதிரி நினைப்பு. ஒவ்வொரு லோனையும் வரம் மாதிரில்ல நினைச்சு படுபிகு பண்ணி தரீங்க!"

"லோன் வாங்க வந்தீங்களா, சண்டை போட வந்தீங்களா ஜெபமாலை? மிஸ் மஞ்சு! இவங்களை ஷூரிட்டியா கூட்டிட்டுப் போனா எந்த பேங்குக்கும் லோன் தரமாட்டான்!"

ஆங்காரமாய் சிரித்தாள் ஜெபமாலை. "எந்த பாங்க்ல வேணுமானாலும் என்னால ஒரு நொடில லோன் வாங்கித்தர முடியும். இருக்கறதிலேயே உங்க பேங்க் சர்வீஸ்தான் ரொம்ப மோசம்... கரூர்வைஸ்யா பேங்க் போனா ரத்னகம்பள வரவேற்பு... தெரியுமா உங்களுக்கு?

"வரவேற்பு அதிகம்னா நேரா அங்கேயே போயிருக்க வேண்டியதுதான? சில நிமிடங்கள் ரெண்டு பேரும் அமைதியா உக்காருங்க... மஞ்சுளா! உங்களுக்கு நீங்க கேட்ட லோனை தர நான் தயார்!"

"தாங்க்யூ சார்!"

"அதுக்கு முன்னாடி ஒரு சிறு உபகாரம் எனக்கு செஞ்சாகனும்!"

"அதென்ன?"

"ஜெபமாலை எனக்கு ஒரே ஒரு... ஒரே ஒரு.... ஒரே ஒரு...."

ஒரே ஒரு முத்தம் கொடுக்கச் சொல்கிறான?-முறைத்தாள் ஜெபமாலை.

"வாக்கியத்தை முடிங்க சார்!"

"ஒரே ஒரு பாட்டு பாடச் சொல்லுங்க. பாட்டு என் இதயத்தை தொட்டுச்சுன்னா உங்களுக்கு லோன் அமவுன்ட் உடனடியா சாங்ஷன்!"

"நோ நோ.... நானென்ன தெருப்பாடகியா? காசு போட்டுட்டு பாட்டு கேட்டா பாடுறதுக்கு? எனக்கு மூடு வேணும்... பாடுறதுக்குன்னு ஒரு ஸ்டேஜ் வேணும்.... உண்மையான பத்து ஆடியன்ஸ் வேணும்!"

"ஜெபா! பிகு பண்ணாத. அவர் ஒரே ஒரு பாட்டுதான பாடச் சொல்லி கேக்ராரு.... எனக்காகவாவது ஒரு பாட்டு பாடு!"

இறைஞ்சுவது போல பாவனை செய்தான் கதிரவன்.

"மிஸ்டர் கதிரவன்! நான் பாடத் தயார். டூட்டி நேரத்தல வாடிக்கையாளரை பாடச் சொல்லி கேட்டீங்கன்னு உங்க மேல வங்கி எதாவது நடிவக்கை எடுத்திரப் போகுது!"

"அது என்ன கவலை?"

"சரி என்ன வகையான பாட்டு வேணும்?"

ஜில்லுன்னு ஒரு காதல் படத்ல பூமிகா சூர்யாவை பார்த்து பாடும் பாட்டு... அன்பே வா... என் அன்பே வா.... முன்பே வா..... என் அன்பே வா.... பூப்பூவாய் நான்நான் நானேதான் கேட்டேன் என்னை நானே...."

தொண்டையை மெலிதாகச் செருமிக்கொண்டாள் ஜெபமாலை. பாட ஆரம்பித்தாள். அறைக்குள் மல்லிகைப் பூக்களும் மனோரஞ்சித பூக்களும் பூத்துக் குலுங்கின. காந்தர்வகானம்.

பாடி முடித்ததும் மிக மெலிதாய் கைதட்டினான் கதிரவன். "இளமையான லதா மங்கேஷ்கர் குரலைக் கேட்டது போலிருந்தது ஜெபமாலை. உங்களின் குரலோ என்னை எங்கெங்கோ அழைத்து சென்று இறுதியில் என்னை ஆட்கொண்டது. ஜெபமாலை! உங்களை சந்திக்குத் தருணத்துக்காக காத்திருக்கிறேன். நீங்கள் உங்களது தோழிக்காக லோன் வாங்க வந்தது எனக்கு மாபெரும் சந்தோஷம். உங்களை பார்த்த கணத்திலேயே இந்த வங்கியையே உங்களுக்கு லோனாகத் தர தீர்மானித்துவிட்டேன். ஆனால் நீங்கள் கேட்டது வெறும் அஞ்சு லட்ச ருபா...."

மௌனித்தாள் ஜெபமாலை.

அப்ளிகேஷனில் புகைப்படம் ஒட்டி மனுதாரர் ஜாமீன்தாரர் கையெழுத்துக்கள் பெற்று அடுத்த ஒரு மணி நேரத்தில் லோனுக்கான செக்கை நீட்டினான் கதிரவன்.

"மிஸ் மஞ்சுளா! உங்களது டெண்டல் கிளினிக் சிதம்பரத்தில் நம்பர் ஒன் டெண்டல் கிளினிக்காக பெயர் பெற வாழ்த்துக்கள்!"

"உங்க வாழ்த்துக்கு நன்றி!"

மஞ்சுளா முன்னுக்கு நடக்க பின்னுக்கு நடந்தாள் ஜெபமாலை.

"மிஸ் ஜெபா!"

"என்ன?"

"உங்களின் திருவாயால் மேலும் நூத்துக்கணக்கான பாடல்கள் பாட கேட்க ஆவலாயிருக்கிறேன். பக்தனின் விருப்பத்தை பூர்த்தி செய்வீர்களா?"

"கோரிக்கை பரிசீலிக்கப்படுகிறது பக்தா!" வரம் வழங்குவது போல் கையுயர்த்தி காட்டிவிட்டு தோழியுடன் வெளியேறினாள் ஜெபமாலை.



## 6

பணிபுரியும் பெண்கள் விடுதி. ஜெபமாலையும் மஞ்சுளாவும் நைட்டியில் இருந்தனர். ஜெபமாலையின் மார்பகங்கள் நைட்டியின் பட்டன்களுடன் முட்டி மோதி திமிறி நின்றன.

"ஜெபா! கண்ணாடித்தாளில் சுற்றப்பட்ட லாலிபாப் போலிருக்கிறாய்!"

சிரித்தாள் ஜெபா.

"ஏண்டி ஜெபா! என்ன மந்திரம் பண்ணினாய்? உன் மேல் அந்த பேங்க் மேனேஜர் கதிரவன் கிறக்கமாக இருக்கிறான்!"

"அவனும் மின்னலால் தாக்கி உயிர் தப்பித்தவன் மஞ்சு!"

"உன்னை மின்னல் தாக்கி பிழைத்தோர் குழுமத்தில் பார்த்தானாக்கும்!"

"ஆமா!"

"ஹிர்திக் ரோஷன், திருட்டுப்பயலே 'ஜீவன்' தெலுங்கு மகேஷ்பாபு, மலையாளம் பிருதுவிராஜ் ஹாலிவுட் பென் அப்லேக் கலந்த ஆண்மையாய் பொங்கி வழிகிறான் கதிரவன். பொமேரியன் நாய்க்குட்டி போல் அவனை தூக்கி வைத்துக் கொள்ள ஆசை எழுகிறது. அவனின் டெஸ்ட்ரோஜன் ஹார்மோன் கடலில் பூகம்பம் பூத்து சுனாமி எழுந்து எதிர்பட்ட பெண்களை மூழ்கடிக்கிறது. ஹி எஸ் எ டெரிபிக் ட்ரீட் டு வாட்ச்!"

மட்டென்று மஞ்சுவின் தலையில் ஒரு செல்லதட்டு தட்டினாள். "ஏண்டி இப்டி அலையுறீங்க? அவனை பார்த்ததும் ஏன் மளமளவென சரியுறீங்கடி?"

"என்னைத் தவிர, வேற யார் கதிரவனைப் பார்த்து சரிஞ்சது...?"

"கதிரவனை மருத்துவமனைல ரெண்டு வாரங்கள் பாத்த நர்ஸ் நளினி!"

"இதயம் பேசுகிறது மணியனின் கதை போலிருக்குடி ஜெயா. ஒரு ஆணுக்கு மூணு பொண்ணுகள் போட்டி. சபாஷ் சரியான போட்டி!"

"நான் அவனைக் காதலிக்காதப்ப நானெப்படி உங்க ரேஸில் கலந்தவள் ஆவேன்?"

"நிஜமாத்தான் பேசுறியா, இல்ல சும்மா பம்மாத்து பண்றியா?"

"நான் வாழ்க்கைல பலவிஷயங்களுக்கு அதன் தகுதியையும் தேவையைம் வைத்து முக்கியத்துவம் கொடுத்து வருகிறேன். அந்த டாப் டென் விஷயங்களில் செக்ஸ் இல்லவே இல்லை. ஆனா

பெரும்பாலான பெண்கள் செக்ஸைத் தவிர வேறு எதுக்கும் முக்கியத்துவம் தர்றதில்லை. உங்க விருப்பங்களில் ரசனைகளில் நான் தலையிடமாட்டேன். என் விருப்பம், ரசனைகளில் நீங்கள் தலையிடாதீர்கள்..."

"அப்டின்னா நீ கல்யாணமே பண்ணிக்கப் போறதில்லையா?

"அதப்பத்தி உனக்கென்ன கவலை மஞ்சு?"

"நீ எதனால இப்டி பேசுறன்னு எனக்கு தெரியும்!"

"என்ன தெரியும் உனக்கு?"

"மின்னல் தாக்கி உயிர் பிழைத்ததிலிருந்து உனக்குள் வெறுமை பீரிடுகிறது. மீண்டும் எந்நேரத்திலும் மின்னல் தாக்கக்கூடுமோ என உள்ளுக்குள் பயந்து சாகிறாய். இந்நிலையில் இன்னொரு மின்னல் தாக்கி பிழைத்தவனை எப்படி காதலிப்பது என தயங்குகிறாய். இந்த பூமி முழுக்க மரணத்தின் ஆளுமையில்தான் இருக்கிறது. மரணம் மனித உயிர்களிடம் நூறுவழிகளில் விளையாடி உயிர்பறிக்கிறது. இந்த விளையாட்டில் இதுவரை தோற்காத உயிரினங்கள் இல்லவே இல்லை. உனக்கு மின்னல் என்றால் எனக்கு நிமோனியோ காய்ச்சலாக இருக்கலாம். என்றாவது ஒருநாள் மிக நிச்சயம் நம்மை தழுவப் போகும் மரணத்துக்காக இன்றைய சந்தோஷங்களை நாம் தொலைக்கலாமா?"

"இந்த டாபிக் எனக்கு போரடிக்கிறது. வேற எதாவது பேசலாமா?"

"எனது டெண்டல் கிளினிக்குக்கு என்ன பெயர் வைக்கலாம்?"

"உனது அம்மா பெயரோ உனது அக்கா மகள் பெயரோ வைக்கலாம்!"

"ம்ஹும்... வேற எதாவது வித்தியாசமாக... நீ தப்பா நினைக்கலேன்னா கதிரவன்கிட்ட ஒரு பெயர் சஜஸ்ட் பண்ண சொல்லப் போறேன்!"

"கேட்டுக்கோ!"

அலைபேசியை எடுத்து பத்து இலக்கங்கள் அமுக்கினாள். எதிர்முனை உயிர்த்தது.

"ஹாய் கதிரவன்! நான் மஞ்சுளா–ஜெபமாலையின் தோழி"

"ஹாய் ஹாய்!"

"என்ன பண்ணிட்டுருக்கீங்க?"

"எஃப் டி.வி.ல ரியோடி ஜெனிரோ கார்னிவல் பாத்துக்கிட்டுருக்கேன்!"

"ஸ்மார்ட் ஸ்மார்ட்! காலைலயே கேக்கனும்னு நினைச்சேன்... நீங்க தனியா இருக்கீங்களே, உங்க பெற்றோர் எங்கிருக்காங்க கதிர்?"

"என் நேட்டிவ் கோயம்புத்தூர். என் தந்தை ஒரு ஸ்பின்னிங் மில்லில் மேனேஜராக இருந்து ஓய்வு பெற்றவர். என் அம்மா ஒரு



ட்ராயிங் டீச்சர். எங்க பெற்றோருக்கு ஒரு பெண், ஒரு ஆண். மூத்தது பெண். எனது அக்காவுக்கு ஒரு ஸாப்ட்வேர் இன்ஜினியரை திருமணம் செய்து வைத்தோம். என் மச்சான் அக்காவையும் எனது பெற்றோரையும் கலிபோர்னியா கூட்டிக்கொண்டு போய் விட்டார். தினமும் நெட்போனில் பேசிக் கொண்டு இருக்கிறோம் மஞ்சு!"

"நீங்க வெஜிடேரியனா...?"

"இல்லை. ப்யூர நான் வெஜிடேரியன்... கடல் உணவுகள் மிகவும் பிடிக்கும்."

"ஸ்மோக்கிங் உண்டா?"

"இல்லை!"

"உற்சாகப்பானம்?"

"வாரம் ஒருமுறை ஒயின் குடிப்பதுண்டு!"

"பெண் நண்பர்கள்?"

"உண்டு. ஆனால் யாரையும் கட்டில் வரை கூட்டி வந்ததில்லை!"

"ஏன்"

"தொடர் முயற்சி போதாது. என்னை ஏன் இத்தன கேள்விகள் கேக்றீங்க? கேள்விகளை சுயமா கேக்றீங்களா, ஜெபமாலை கேக்கச் சொல்லி கேக்றீங்களா?"

"எப்படி வேணும்னாலும் வச்சுக்கங்க..."

"உன் ப்ரண்ட் ஜெபமாலையை பத்தி கொஞ்சம் சொல்லுங்களேன்!"

"என்ன சொல்லனும்?"

"அவங்க குடும்பத்தை பத்தி!"

"ஜெபமாலை ஒரு கிறிஸ்டியன் ஆர்பனேஜில் வளர்ந்தவள். ஜெபமாலையை வளர்த்த சிஸ்டர்தான் பெயர் வச்சிருக்காங்க. இப்ப ஜெபமாலை சுதந்திரமா ஒரு ம்யூசிக் டீச்சரா செயல்படுரா. வருடத்துக்கு இருமுறை தான் வளர்ந்த அனாதை இல்லத்துக்கு சென்று வருவாள். நாங்க ஜெபமாலையை செல்லமாக 'ஜெபா' 'ஜெபு' என அழைப்போம். பியானோ, கிட்டார், கீபோர்டு வாசிப்பதில் கெட்டிக்காரி.

"வாவ்! ஜெமாலைக்கு பின்னாடி இத்ன விஷயங்கள் இருக்கா?"

"எஸ்!"

"உங்க பக்கத்ல தான ஜெபா இருக்காங்க?"

ஆமா!"

"என் கூட பேசச் சொல்ல மாட்டீங்களா?"

"காலைலதான ஆசைதீர பேசுனீங்க, பாடச் சொல்லி கேட்டீங்க!"

"கேக்க, கேக்க அலுக்கல அவங்க குரல்!"

"அப்படின்னா என் குரல் நாராசமாக இருக்கா?""

"உங்க குரலும் இனிமைதான்.... எவரி பிமேல் வாய்ஸ் இஸ் யுனிக்!"

"நீங்க ஒரு உதவி செஞ்சா, ஜெபாவை பேசச் சொல்லுவேன்!"

"அய்யய்யோ.... இன்னொரு லோனா?"

"பயப்படாதீங்க.... நான் திறக்கப்போற டெண்டல் கிளினிக்குக்கு ஒரு பெயர் வைங்களேன் பாப்போம்!"

"இதெல்லாம் எனக்கு பழக்கமில்லைங்க!"

"நீங்க எந்த பெயர் சொன்னாலும் கண்ணை மூடிக்கிட்டு அந்த பெயரைத்தான் வைக்கப் போறேன்!"

"என்ன மாதிரி பேர் வேணும் உங்களுக்கு?"

"ஸிம்பிள் அண்ட் கிரிஸ்ப்!"

யோசிக்க ஆரம்பித்தான் கதிரவன்.

"என்னங்க சத்தத்தையே காணம்–அப்டியே தூங்கிட்டீங்களா?"

"இல்ல.... இல்ல.... கடுமையா யோசிச்சுக்கிட்ருக்கேன்!"

"சீக்ரமா யோசிச்சு முடிங்க!"

"யோசிச்சிட்டேன்... 'புன்னகை பல்மருத்துவ மையம்' எப்டியிருக்கு,"

"நைஸ்"

"யாரை வைச்சு திறக்கப் போறீங்க?"

"உங்களை வச்சுத்தான்!"

"அய்யய்யோ.. நான் எதுக்கு?"

"உங்க கைராசியை நம்புறேன்.."

"பார்த்த ஒரு நாளில் என் கைராசி மீது அவ்வளவு நம்பிக்கை?"

"யெஸ்"

"உங்க கிளினிக்குக்கு பெயர் வச்சிட்டேன். உங்க கிளினிக்கை திறந்து வைக்க ஒத்துக்கிட்டேன். இந்த ரெண்டுக்காவது ஜெபாவை என்னுடன் பேசச் சொல்ல மாட்டீங்களா?"

"அலையாதே கண்ணா! (திரும்பி) ஜெபா! பேசு!"

"நான் பேசல. நான் அவரோட பேச புதுசா எந்த விஷயமும் இல்லைன்னு சொல்லு."

"ரொம்பத்தான் பிகு பண்ணிக்காதடி.. சும்மா சம்பிரதாயத்துக்காவது ஒரு நாலு வார்த்தை பேசு!"

அலைபேசியை வாங்கினாள். "ம்... சொல்லுங்க!"

"என்னங்க இப்டி அதட்றீங்க.."

"விளையாடாதிங்க. ஏன் என்னை சுத்தி சுத்தி வந்து பேசுறீங்க? மஞ்சுளாதான் இன்ட்ரஸ்ட்டா பேசுறாள்ல... அவகிட்ட விடியவிடிய





பேசிட்டு போக வேண்டியதுதான"

"மஞ்சுளாகிட்ட பேசுறதே உங்ககிட்ட பேசத்தான?"

"சரிசரி... வழியாதிங்க... என்ன வேணும் உங்களுக்கு?"

"ஒரு பாடல் வேணும்!"

"என்னமோ சன் ம்யூஸிக்குக்கு போன் பண்ணி கேக்றமாதிரி கேக்றீங்க.... காக்கா காக்கா ஒரு பாட்டு பாடுன்னு நரி கேட்ட மாதிரி நீங்க என்னை பாடச் சொல்லி கேக்றீங்களா?"

"அப்டி இல்ல!"

"என்னால போன்ல எல்லாம் பாட்டுப்பாட முடியாது!"

"அப்டின்னா இப்பவே கிளம்பி உங்க ஹாஸ்ட்லுக்கு வந்திர்றேன்... என் முன்னாடி பாடுறீங்களா?"

"ஒரு மாதிரி வம்பு பண்றீங்க...."

"வம்பும் இல்லை கிம்பும் இல்லை. நான் ஒரு பாட்டை பாடச் சொல்லுவேன்... நீங்க பாடுனஅடுத்த நொடி லைனை கட் பண்ணிட்டு தூங்கப் போய்டுவேன்!"

"என்ன பாட்டு"

"ஒரு தாலாட்டுப் பாட்டு?"

"அத உங்கம்மா கிட்ட போய்க் கேளுங்க!"

"பி.சுசிலா பாடின 'மலர்ந்தும் மலராத பாதிமலர் போல மலர்ந்த எழில் வண்ணமே' பாட்டை பாடுங்களேன்... ப்ளீஸ்!"

பாட ஆரம்பித்தாள் ஜெபமாலை. தேவகானம். ஜெபமாலை பாட ஆரம்பிக்கும் போதே வானில் மேகங்கள் சூழ ஆரம்பித்தன. தொடர்ந்து மின்னல்கள் வெட்ட ஆரம்பித்தன.

மஞ்சுளா வளர்க்கும் பூனை ஒன்று மியாவ் மியாவ் என்றபடி பாடும் ஜெபாவை நெருங்க– ஒரு மின்னல் வெட்டியது. ஸிர்ரக்.

மின்னல் சரசரவென இறங்கி பூனை மீது பாய்ந்தது. பூனை கருகி சிதறியது. பாடிக்கொண்டிருந்த ஜெபமாலை அலறினாள்!

## 7

மருத்துவமனை.

ஆடைகளை களைந்துவிட்டு பட்டுத்திருந்தான் கதிரவன். அங்குலம் அங்குலமாய் சோதித்தார் தலைமை மருத்துவர்,

"உணவு விழுங்கறப்ப எதாவது தொண்டைல சிரமம் இருக்கா?"

"இல்லை!"

"பார்வை மங்கல் பார்வையில் பூச்சி பறத்தல் இருக்கா?".

"இல்லை!"



"இரவுத்தூக்கம் முறையா வருதா?"

"வருது டாக்டர்!"

"சவாசிப்பதில் அசௌகரியம்... இடது நெஞ்சல் வலி இருக்கா?"

"இல்லை!"

"உடலின் மேற்தோலில் எரிச்சல் அலர்ஜிக் ஆக்ஷன்ஸ் ஏதாவது இருந்து மறையுதா?"

"இல்லை டாக்டர்!"

"திரும்ப மின்னல் தாக்கக்கூடும் என்கிற பயம் இருக்கா?"

"மீண்டும் மின்னல் என்னை தாக்க விஞ்ஞான ரீதியா என்ன சான்ஸ் இருக்கு டாக்டர்?"

"நோ சான்ஸ் கதிரவன்... பட்..."

"நீங்க என்ன சொல்ல வரீங்கன்னு புரியுது டாக்டர். மின்னல் தாக்குதல்களை எதிர் கொள்ள ஆயத்திமாயிருக்கிறேன் அந்த மனதைரியத்தை மின்னல் தாக்கி பிழைத்தோர் குழுமம் எனக்கு வாரிவழங்கியுள்ளது!"

"குட்!"

"மின்னல் என்னை தாக்கி ஆறுவாரங்கள் ஆகின்றன. எனக்குப்பின் யாராவது சிதம்பரத்ல மின்னலால் தாக்கப்பட்டிருக்கிறார்களா?"

"கவரப்பட்டில் ஒரு வயல் வேலை செய்யும் 22 வயது பெண் மின்னல் தாக்கி இறந்திருக்கிறாள் கதிரவன்!"

"இப்படி அசாதாரண மின்னல்கள் சிதம்பரத்தை தாக்கி வருகின்றனவே.... அதற்கு அரசாங்கம் என்ன எதிர் நடவடிக்கை எடுத்துள்ளது டாக்டர்?"

"வானிலை ஆய்வு மையத்தால் இந்த மின்னல் தாக்குதல்களுக்கு லாஜிக்கல் ரீஸன் சொல்ல இயலவில்லை. டென்மார்க்கைச் சேர்ந்த ஒரு இளம்பெண் கேத்தரின் இந்த அசாதாரண மினனல்களை ஆராய வந்திருக்கிறார். அவர் யுனிவர்சிடி கெஸ்ட் ஹவுஸில் தான் தங்கியுள்ளார். உங்களது கேஸ் டிடெய்ல்ஸை கூட வாங்கிட்டுப் போயிருக்கிறார். அவர் உங்களது தொடர்பு எண்ணை வாங்கிச் சென்றிருக்கிறார். அவர் உங்களை தொடர்பு கொள்ளக்கூடும்!"

"தலையாட்டினான்.

"எழுந்து ஆடைகளை அணிந்து கொள்ளுங்கள் கதிரவன்!"

"அணிந்து கொண்டான். மருத்துவரின் வெளி அறையில் வந்தமர்ந்தனர்.

"ஹாய் கதிரவன்!" என்றபடி நளினி வெளிப்பட்டாள். நளினியை அடையாளம் தெரியாமல் விழித்தான்.

"டூட்டி முடிஞ்சு விருப்ப ஆடைக்கு மாறியிருக்கும் நர்ஸ் நளினி நான்!"

"ஹாய் நளினி!"

"டாக்டர்! ரொட்டீன் செக்கப் ஓவர்தான? நான் இவரை அழைத்துக்கொண்டு வெளியில் செல்லலாமா?"

"தாராளமா!"

நளினியும் கதிரவனும் மருத்துவமனைக்கு வெளியே நடந்தனர்.

"யூ ஆர் கரக்ட் நளினி!"

"என்ன சொல்றீங்க?"

"புடவை ஜாக்கட்ல யூ லுக் ஜார்ஜியஸ்... அசப்பில் நடிகை லட்சுமிராய் போலிருக்கிறீர்கள்!"

"நன்றி... நான் உங்களுடன் நிறைய பேச விரும்புகிறேன்... (விசிட்டிங் கார்டு நீட்டினாள்) இன்றிரவு எனது வீட்டில் உங்களுக்கு மெழுகுவர்த்தி வெளிச்ச விருந்து! மறுக்காம சாக்குபோக்கு சொல்லாம மிகச் சரியாக இரவு எட்டு மணிக்கு வந்து சேருங்க!"

விசிட்டிங்கார்டை வாங்கிக் கொண்டான். ஸ்கூட்டியை ஸ்டார்ட் செய்து பறந்து மறைந்தாள்.

கவிதை அடுக்கமாடிக் குடியிருப்பு.

காரை நிறுத்தி இறங்கினான் கதிரவன். செக்யூரிட்டி ஓடி வந்தான்.

"யாரை பாக்கனும் சார்?"

"மிஸ் நளினி?"

மூன்றாவது மாடி பால்கனியில் நளினி தோன்றினாள். "செக்யூட்டி! அவர் என் கெஸ்ட்! அவரையும் அவரது காரையும் உள்ளே அனுமதியுங்க!"

கார் நிறுத்துமிடத்தில் காரை நிறுத்தினான். மாடிப்படுக்கட்டுகளை தாவித்தாவி ஏறினான். குறிப்பிட்ட பிளாட் கதவைத் தட்டினான். லோகட் மார்புசட்டையும் கவுனும் இணைந்த வெல்வெட் ஆடை அணிந்திருந்தாள். கழுத்தில் பிளாட்டினல் நெக்லஸ். காதுகளில் நீள ஆச்சர்யக்குறிகளாய் ஸ்டட்குள். தலைகேசத்துக்கு ஜெல் ஈஷி ரோம சாகசம் செய்திருந்தாள். உதட்டில் லிப்ஸ்டிக்.

ஒற்றை ரோஜாவை நீட்டினாள். "வருக வருக!"

வாங்கிக் கொண்டு உள்ளே நடந்தான். கதவை உட்புறமாகத் தாளிட்டாள். "எட்டு வருடபிளாட் தங்கலில் எனது பிளாட்டுக்குள் பிரவேசித்த முதல் விருப்ப ஆண் நீங்கதான்!"

"உக்காருங்க!" வரவேற்பறை சுவர் ஓவியங்களை ரசித்தான்.

காளான் சூப் நீட்டினாள். வாங்கி உறிஞ்சினான். ஸி.டி.யை உயிர்ப்பித்தாள். பழைய எம்.ஜி.ஆர்.சரோஜாதேவி காதல் பாடல்கள் ஒலிக்க ஆரம்பித்தன.

ஒரு மேஜை



இரு நாற்காலிகள்.

நான்கு அலங்கரிக்கப்பட்ட மெழுகுவர்த்திகள்.

மெழுவர்த்தி வெளிச்ச விருந்துக்கான ஆயத்தங்களை செய்து முடித்தாள். உணவை எடுத்து வைத்தாள். ஒயிட் ஒயின் பாட்டிலை கார்க் ஓபனர் வைத்து திறந்து வைத்தாள். "ஜெபமாலை என்ன சொல்றா?"

"ஜெபாவைத்தவிர வேற எதாச்சும் பேசுவோமே? உங்க குடும்பத்தார் எங்க இருக்காங்க?"

"நாங்க கொச்சினில் செட்டில் ஆன தமிழர்கள். எனக்கு ஆறு வருடங்களுக்கு முன் திருமணமாகி நான்கு வருடங்களுக்கு முன் டைவர்ஸ் ஆய்ருச்சு. எனக்கு குழந்தைகள் இல்லை. பேரன்ட்ஸ் கொச்சின்ல இருக்காங்க. நான் இந்த யுனிவர்சிட்டி ஹாஸ்பிட்டலுக்கு ஹெட் நர்ஸா வந்து நாலு வருஷமாச்சு."

"மிகமிக வேகமா முன்கதைச் சுருக்கம்..."

"நீட்டிச் சொன்னா போரடிச்சிரும்." சிரித்தாள்.

"அஃப் கோர்ஸ் நளினி...!"

"என் காதல் அப்ளிகேஷன் பரிசிலனைல இருக்கா?"

"தெரியல!"

"நான்-கமிட்டட் ரிப்ளை!"

"சிரித்தான்.

"ஓகே! இனி நாம ஒருத்தருக்கொருத்தர் ஒருமைல பேசிக்கலாமா?"

"ரைட்டோ!"

"உன்னுடைய பாதுகாப்பைப் பற்றி முதலில் பேசுவோம். கதிர் மின்னல் அடுத்தடுத்து உன்னை தாக்க கட்டாயம் முயற்சிக்கும். அதன் முயற்சிகளை முறியடிக்க சில யோசனைகள் கூறுவேன். மறுக்காம ஏற்பாயா?"

"தாராளமா!"

"உன்னுடைய அக்கம் பக்கத்து பிளாட்களின் உச்சிகளில் இடிதாங்கி பொருத்தச் சொல்லு. அவர்கள் பொருத்த சோம்பல் பட்டால் உனது செலவிலேயே இடிதாங்கிகள் பொருத்திவிடு!"

"நல்ல யோசனை..."

"விசேஷ உலோகத்தால் தயாரிக்கப்பட்ட மோதிரம் ஒன்றை கேரளமாந்திரீகர் ஒருவரிடமிருந்து தருவித்திருக்கிறேன்.... அணிந்து கொள்!"

வாங்கி இடது மோதிர விரலில் அணிந்து கொண்டான் கதிரவன். விரலின் பருமன்

தொடர்ச்சி 34-ம் பக்கம்

31-ம் பக்கத் தொடர்ச்சி அளந்து செய்தது போல் கச்சிதமாயிருந்தது.

"தாங்ஸ் நளினி!"

எடை குறைந்த அதிநவீன பிளாஸ்டிக்கால் தயாரிக்கப்பட்ட ஒரு முகமூடியை எடுத்து வந்து நீட்டினாள். "மழைக்காலங்களில் இந்த முகமூடியை மாட்டிக் கொண்டு நடமாடு!"

"மின்னல் அடையாளம் தெரியாமல் என்னை தாக்காது விட்டுவிடுமா?"

"கிண்டல் வேணாம். அணிஞ்சிக்கன்னா அணிஞ்சிக்க!"

அணிந்து பார்த்துவிட்டு கழற்றி மடியில் வைத்துக் கொண்டான். "அப்றம்?"

"தினம் காலை எழுந்ததும் இரவு படுப்பதற்கு முன்னும் கீழ்க்கண்ட ஜபத்தை முணுமுணு!"

"மின்னல் தேவதைக்கு ஸ்தோத்திரம்!
தெரிந்தோ தெரியாமலோ
மனிதப்பதராகிய நான்
இப்பிறவியிலோ முற்பிறவியிலோ
உன்னை கோபப்படுத்தியிருந்தால்
என்னை மன்னித்து விடு தேவதையே!
நீ என்னை மன்னித்தால்
நான் நூறாண்டுகாலம் வாழ்ந்து
உன்னை அனுதினம் வாழ்த்தி மகிழ்வேன்!"

"ரொம்ப பெனடிக்கா இருக்கிறது இந்த ஜபம். கிரேக்கர்கள்தான் கடலையும் மின்னலையும் ஆண்தேவதை, பெண்தேவதை என பெயர் சூட்டி வழிபடுவார்கள் நளினி."

"நீ நம்பாமலிருக்கலாம். நான் மின்னலை தேவதை என்றே நம்புகிறேன். இதை மூடநம்பிக்கை என்று சொல்லாதே. எதனையும் மூடநம்பிக்கை என ஆணித்தரமாய் அறிவிக்க நம்மிடம் ஆதாரங்கள் தரப்படவில்லை கதிரவன்!"

சிரித்தான் கதிரவன். "ஓகே.... இந்த ஜபத்தை தினம் இருமுறை உச்சரிக்கிறேன் நளினி!"

"உன்னைப் பாதுகாக்க இத்தனை ஏற்பாடுகள் நான் செய்வதே உன்னை அடையத்தான். ஜெபமாலை உன் காதலை ஏற்காத பட்சத்தில் நீ கட்டாயம் என்னை சரணடைந்து விட வேண்டும். எனக்கு வெறும் உடல் இச்சைகள் இருந்தால் சாமதான பேத தண்ட முறைல இன்னைக்கி உன்னை அடைஞ்சிருவேன். எனக்கு அது நோக்கமல்ல. மற்ற எந்த பெண்ணை நீ திருமணம் செய்து கொண்டாலும் அவர்கள் தோளில் ஏறி அமர்ந்து சவாரி செய்வார்கள். நானோ உன்னை



எனது இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டு நிலாச்சோறு ஊட்டும் இரண்டாம் தாயாவேன். நர்ஸ்கள் டாக்டர்களை விட சேவை மனப்பான்மை அதிகம் உடையவர்கள். பல சமயங்களில் மருத்துவர்களின் மருந்துகளை விட செவிலியர் நங்கைகளின் சேவைகள் நோயாளியின் உயிரைப் பாதுகாக்கும்."

பதில் பேசாமல் மௌனித்தான்.

"மெழுகுவர்த்தி வெளிச்ச விருந்தில் கலந்துகொண்டு எனது அழைப்பை சிறப்பித்தமைக்கு நன்றி கதிரவன். நேரமாகி விட்டது. புறப்படு கதிரவன்!"

எழுந்தான். இருகை குவித்து வணங்கினான்.

"குட் நைட் கதிரவன்!"

"குட் நைட் நளினி!"

காரைக் கிளப்பினான் கதிரவன். வானில் மழைமேகங்கள் திரண்டு மின்னல்கள் வெட்ட ஆரம்பித்தன. வண்டிகேட் ரோட்டில் கார் சீறியது. சடசடவென மின்னல் சிதறியது. கதிரவனுக்கு முன்னால் போய்க் கொண்டிருந்த கன்டெய்னர் லாரியின் மீது மின்னலும் தொடர்ந்து இடியும் விழுந்தன. சுமார் எண்பதடி தூரத்துக்கு உயர்ந்து கன்டெய்னர் லாரி வெடித்து சிதறியது. சிதறல்களில் சிக்காமலிருக்க தனது காரின் வேகத்தை மிதித்து இடப்பக்கம் திருப்பி சாலையை விட்டு இறங்கி

"வசந்த பஞ்சமி நாளன்றுதான் பிரம்மன் சரஸ்வதியைப் படைத்து அவருக்கு கல்வி ஆற்றலை அளித்து, கையில் வீணையைப் பரிசளித்தார். வசந்த பஞ்சமி மக மாதத்தில் (ஜனவரி – பிப்ரவரி) பௌர்ணமியிலிருந்து ஐந்தாம் நாள் கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் வடநாடுகளில், ஏராளமான திருமணங்கள் நிகழ்த்தப்படுகின்றன.

– க. ரவீந்திரன்



சாக்கடையில் குத்தி நின்றான். ஸ்டியரிங்கின் மீது முகம் இடித்தது. நெற்றி புடைத்தது. ஸ்டியரிங்கின் மீது தொய்ந்தது மயங்கினான் கதிரவன்.

பின்னுக்கு வந்த வாகனங்கள் ஒன்றன் மேல் ஒன்று மோதி ஒரு மெஹா களேபரம் பூத்தது.

## 8

நெற்றிக்கு காயத்துக்கு ட்ரஸ்ஸிங் செய்திருந்தனர். எழுந்தமர்ந்தான். நர்ஸ் சீருடையில் நளினி உட்பட்டாள். "பார்த்தாயா? எனது மோதிரம் உன்னை மின்னலின் தாக்குதலிலிருந்து காப்பாற்றி விட்டது!"

"கன்டெய்னர் லாரி வெடித்துச் சிதறியதே? எத்தனை பேர் இறந்தனர் நளினி?"

"ஆறு பேர் மரணம்!" பதினேழு பேர் காயம்!"

உதடு பிதுக்கினான். "மிஸ்டிக்!"

"ஜெபமாலை, மஞ்சுளா, டென்மார்க் பெண்மணி கேத்தரின்(?) உட்பட்டனர்.

"பருவப்பெண்கள் கூட்டம் நலம் விசாரிக்க வருகிறது கதிர். இருந்தாலும் நீ ரொம்ப பொல்லாதவன், உன் நலம் விசாரிக்க ஆம்பிளை ஒருத்தனாவது வந்திருக்கானா பாரு!"

சிரித்தான் கதிரவன். ஆப்பிள்பழங்களையும் ஹார்லிக்ஸ் பாட்டில்களையும் சாத்துக்குடி பழங்களையும் நீட்டினாள் ஜெபமாலை. லோசாக கண்கலங்கினாள். "நானாக வரல... மஞ்சுதான் கூட்டி வந்தா!"

"சரி!"

"உன்காயம் எதாவது பட்டிருக்கா?"

"இல்லைன்னு நினைக்கிறேன்!"

"நைட்ல ண்டைம்ல சுத்தலாமா?"

"இரவு கேண்டில்லைட் விருந்துக்கு நளினி இன்வைட் பண்ணிருந்தா.... போனேன்!"

கோபமாய் கனன்றாள். "வெறும் விருந்து மட்டுமா... கூட வேற ஏதுமா?" குறும்பாய் கண்சிமிட்டி விசாரித்தாள் மஞ்சுளா.

"எல்லாவற்றையும் வெளியில சொல்ல முடியுமா?"

"யாருக்கும் தெரியாமல் நறுக்கென்று கிள்ளினாள் ஜெபமாலை. துள்ளி கிரீச்சிட்டான்.



"என்னாச்சு? என்னாச்சு?" பதற்றமாய் ஓடிவந்தாள் நளினி.

"எறும்போ எதுவோ பெட்டுக்கு அடியிலிருந்து கடிச்சிருச்சு சிஸ்டர்!"

"பெட்டை தட்டித்தானே போட்டேன்? அப்டியும் எறும்பு கடிச்சா என்ன பண்றது?"

படுக்கையை தட்டி எறும்பைத் தேடுவது போல் ஜெபமாலையின் காலை ஒரு மிதி மித்தாள் நளினி.

"இஸ்... ஆ!" துள்ளினாள் ஜெமாலை.

"என்ன? என்ன?

"கால்ல எதுவோ கடிச்சிருச்சு!"

"டென்மார்க் பெண்மணி கதிரவனுக்கு குனிந்து கைநீட்டி கைகுலுக்கினாள்.

"கிளாட் டு மிட் யூ! மீ கேத்திரின். 'Extra ordinary lightning Strikes in Chidambaram city of Tamilnadu of South india' என்கிற தலைப்பில் ஆராய வந்திருக்கேன். வில் யூ கோ ஆபரேட் வித் மீ?"

"யெஸ்!"

"சில நாட்கள் ஓய்வெடுங்க. வருகிற ஸண்டே சந்திப்போம். ஓகே. டேக் கேர்!"

கேத்திரின் மரியா ஷரபோவா போல இருந்தாள். உயரம் 185செமீ உயரத்துக்குப் பொருந்தாத சிறு மார்பகங்கள். அவள் போனவுடன் அவள் பேசுவது போலவே நடித்துக் காட்டினாள் மஞ்சுளா, "பார்ரா! ஒன்மோர் கேண்டில் லைட் ஸப்பர் இன்விடேஷன். எல்லோருக்கும் மச்சம் ஒண்ணு ரெண்டு இருக்கும். ஆனா உங்களுக்கு கதிர் மச்சமே உடலாயிருக்கு!" காதுகளில் சிசுகிசுத்தாள் மஞ்சுளா.

"உங்க தோழி கேண்டில்லைட் விருந்துக்கு கூப்பிட மாட்டேங்கிறாங்களே!"

"ஆசை ஆசை!"

தலைமை மருத்துவர் அறைக்கள் பிரவேசித்தார். "இது என்ன வார்டா? பார்ட்டி பிளேஸா? தயவுசெய்து அனைவரும் புறப்படுங்க... பேஷன்ட்டுக்கு அதிக காயங்கள் இல்லாவிட்டாலும் கடுமையான மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளார். அவர் இயல்புநிலை மீள குறைஞ்சது இன்னும் 48மணி நேரமாகும்..!"

ஜெபமாலையும் மஞ்சுளாவும் நடந்தனர். ஜெபமாலை திரும்பிதிரும்பி பார்த்தபடி நடந்தாள். அவள் திரும்பிப் பார்க்கும் போதெல்லாம் பறக்கும் முத்தங்களை பரிசளித்தான் கதிரவன். எல்லோரும் அகன்றபின் நளினி கதிரவனை நெருங்கினாள்.

"நான் உனக்கு ஒரு ரகசியம் சொல்லட்டா?"

"என்ன?"

"ஜெபா என்ன காதலிக்கிறா! அவ உன்ன கிள்ளினது பொறாமையாலதான்!"

"எனக்கும் தெரியும் நளினி!"

"அவ காதலை நீ அடையனும்னா நீ உயிரோட இருக்கனும் கதிர்!"

"ஆமாம்!"

"கொச்சினிலிருக்கும் நம்பூதிரியை வரச் சொல்றேன்... அவர் உன்னை நேரில் பார்த்தா மேலும் பல வீரியமான பரிகாரங்கள் சொல்லுவார். அவர் தரும் தீர்வு நிரந்தரத் தீர்வாக இருக்கும் கதிர்!"


அடுத்த இதழ்

பிரபுசங்கர்

எழுதிய

சுட்டும் விழிச்சுடரே...

விறுவிறுப்பான குடும்ப நாவல்


"ஓகே... அவரை வரச் சொல்லு நளினி.."

"தாங்க்யூ!"

"ஓய்வெடு கதிர்!" அகன்றாள் நளினி.

சற்றே கண்ணயர்ந்த கதிரவன் மெதுவாக எழுந்தான். மணி நள்ளிரவு 12.45. பூனைபாதம் வைத்து சிறப்புவார்டை விட்டு வெளியே நடந்து வந்தான். வையிலிருந்த முகமூடியை எடுத்து முகத்தில் மாட்டிக் கொண்டான். டெர்ரஸ் ஏறி நின்றான்.

அண்ணாந்தான்.

மனிதமனங்களின் ஆசைகளின் எண்ணிக்கையில் நட்சத்திரங்கள். நட்சத்திரங்களை எண்ண ஆரம்பித்தான். 86வது நட்சத்திரத்தை எண்ணிக் கொண்டிருக்கும் போது கருநீல வானம் சிமின்ட் நிறம் கலந்த கறுப்புக்குத் தாவியது.

நட்ப்புநொடியில் வானத்தில் ஒரு நட்சத்திரத்தைக் கூட காணோம்!

மின்னல்கள் வெட்ட ஆரம்பித்தன. கண்களை கட்டிக் கொண்டு பலிங்சடுகுடு ஆடுவதுபோல மின்னல்கள் கதிரவனை அடையாளம் தெரியாமல் எங்கெங்கோ பாய்ந்தன. பந்து கோல் போஸ்ட்களுக்கு வெளியே பாய்வது போல மின்னல்கள் இலக்கு தவறின. மின்னல்கள் கண்களை கட்டிக் கொண்ட சிறுவர்களாய்... கதிரவனோ கண்ணாமூச்சி



ஆடும் தனி சிறுவனாய்.....

என்னவொரு ஆச்சரியம்!

ரன்னரை ரன் அவுட்டாக்க முயற்சிக்கும் பீல்டர் ரன்னர் எல்லைக் கோட்டை எப்படியும் தொட்டுவிடுவார் பந்தை விட்டெறிந்தால் ஓவர் த்ரோ ஆகிவிடும் என பயந்து பந்தை விட்டெறிவது போல் பாவனை காட்டி தனது கையிலேயே வைத்துக் கொள்வார்! அதுபோல் மின்னல்களின் அசுரப் பாய்ச்சல் ஒரு பாவனையாகவே அமைந்திருந்தது. சீற்றம் இருந்தது ஆனால் யாரையும் பூமியில் தாக்கவில்லை.

""மின்னல் தேவதைக்கு ஸ்தோத்திரம்!
தெரிந்தோ தெரியாமலோ
மனிதப்பதராகிய நான்
இப்பிறவிலோ முற்பிறவியிலோ
உன்னை கோப்படுத்தியிருந்தால
என்னை மன்னித்து விடு தேவதையே!
நீ என்னை மன்னித்தால்
நான் நூற்றாண்டு காலம் வாழ்ந்து
உன்னை அனுதினம் வாழ்த்தி மகிழ்வேன்!"

–பிரார்த்தித்தான் கதிரவன். அடுத்த சில நொடிகளிலேயே வானம் கருநீல நிறத்துக்கு நட்சத்திரங்களுடன் மீண்டது.

மின்னல்கள் போன இடம் தெரியவில்லை!

ஏதோ புரிந்துகொண்டவனாய் தனது சிறப்பு வார்டு படுக்கைக்கு திரும்பினான் கதிரவன்.

## 9

கேத்தரின் ஸ்லைடு புரஜக்டரில் ஸ்லைடுகளை போட்டுக்காட்ட ஆரம்பித்தான். கைகட்டி அமர்ந்திருந்தான் கதிரவன்.

அடர்ந்த காடுகள் பின்னணியில் நான்கைந்து மின்னல்கள் வானைக் கீறிக் கொண்டு!

"அமேஸான் காடுகளில் ஏற்படும் மின்னல்களை ஸ்லைடு காட்டுகிறது மிஸ்டர் கதிரவன்!"

கொந்தளிக்கும் கடல்! தத்தளிக்கும் கப்பல்... சீறும் மின்னல்.

"புயலும் சூறாவளியும் கனமழையும் சுற்றிச் சுழன்றடிக்கும் இரவுக்கடலில் எடுத்த படம் இது!"

உலகின் பல பகுதிகளில் ஏற்பட்ட நூற்றுக்கணக்கான

மின்னல்கள் பற்றிய ஸ்லைடுகளை வரிசைக் கிரமமாகக் காட்டினாள்.

"நமது கைரேகைகளில் எத்தனை வகை உண்டோ அத்தனை வகைகள் உண்டு மின்னல்களில். பருவமழை மின்னல்களை விட கோடை மழை மின்னல்கள் ஆபத்தானவை. ஒரு வருடத்து மின்னல்களின் மின்சக்தியை சேமித்து வைத்தால் பூமியின் நூறுவருட மின்தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்."

ஆமோதித்தான்.

மின்னல் தாக்கி உயிர் பிழைத்தோரின் பேட்டிகளின் விடியோ பதிவைப் போட்டுக்காட்டினாள் கேத்தரின்.

"இதுவரை நான் மேற்கொண்ட ஆராய்ச்சிகளை வைத்துக் கூறுகிறேன்! சிதம்பரம் நகரத்து தொடர் மின்னல்கள் ஒரு புதிய அபூர்வ கோட்பாடு, பௌதிக விதிகளுக்கு மாறுபட்டது. உங்களது கேஸ்களை ஆராய்ந்து சில திடுக்கிடும் முடிவுகளை உலகிற்கு அறிவிக்கப் போகிறேன்!"

முறுவலித்தான்.

கதிரவனின் மின்னல்தாக்குதல் எபிஸோட்டை முழுவதும் சொல்லச் சொல்லி விடியோ பதிவு செய்தாள் கேத்தரின். கதிரவன் மோதிரம் பற்றியோ முகமூடி பற்றியோ மூச்சு விடவில்லை.

"வேற ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா கதிரவன்?"

"ஆம்!"

"என்ன?"

"வெகுதூரத்திலிருந்து தன்னந்தனியாக ஒரு துணிச்சல் ஆய்வு செய்ய வந்திருக்கிறீர்கள். மகிழ்ச்சி. மிக்க கவனமாய் இருங்கள். மின்னல் உங்களைக் குறிவைத்துத் தாக்கக்கூடும்!"

சிறுமார்பகங்கள் குலுங்க சிரித்தாள் கேத்தரின். "அப்படியெல்லாம் நடக்காது! சிதம்பரம் நகரத்தை மட்டும் குறிவைத்து தாக்கும் மின்னல் டென்மார்க் பெண்மணியை ஏன் தாக்கப்போகிறது?"

"நீங்க அதன் ரகசியங்களை மோப்பம் பிடிக்க வந்திருக்கிறீர்களல்லவா? அதற்காக!"

"நான் பயப்படவில்லை கதிரவன். ஐ வில் கன்பிரான்ட் இட்!"

"நான் புறப்படுகிறேன் கேத்தரின்!"

FORM IV RULE 8

KUNGUMA CHIMIZH

1. Place of Publication : [illegible] High Road, Chennai - 24
2. Periodicity of the Publication : [illegible]
3. Printer's Name : [illegible]
(Whether citizen of India (if Foreigner state the country of origin) : Indian
Address : [illegible] High Road, Chennai - 24
4. Publisher's Name : [illegible]
(Whether citizen of India (if Foreigner state the country of origin) : Indian
Address : [illegible] High Road, Chennai - 24
5. Editor's Name : [illegible]
(Whether citizen of India (if Foreigner state the country of origin) : Indian
Address : [illegible] High Road, Chennai - 24
6. Name & Address of individuals who own the newspaper & Partners : [illegible] Publications (P) Ltd., [illegible] Road, [illegible], Chennai - [illegible]

[illegible] hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Chennai [illegible]
[illegible] Signature of Publisher



"பை.. மீண்டும் சந்திப்போம்!"

"பை!"

கதிரவன் கிளம்பிப் போனான்.

'மாரியப்பன் நகரில் மின்னலால் தாக்கப்பட்ட ஒரு பெண் இருக்கிறாள். அவளை நேர்காணல் பண்ணிவிட்டு வருவோம்.'

எட்டாவது குறுக்குத்தெருவில் நேர்காணலை முடித்துவிட்டு வெளிவாசலுக்கு வந்தாள் கேத்தரின்.

மின்சார சப்ளை துண்டிக்கப்பட்டு நகரே இருளில் மூழ்கிப் போனது.

ஓட்டி வந்த இரண்டு சக்கர வாகனத்தை ஸ்டார்ட் செய்தாள். ஸ்டார்ட் ஆக மறுத்தது. அத்துடன் இரு டயர்களும் பஞ்சராகி இருந்தன.

குளிர்காற்று வளைந்து நெளிந்தோடியது. மேலே அண்ணாந்தாள். வானம் நடிகர் பசுபதி முகம் போல் இருண்டிருந்தது.

மேகங்கள் சரிவர எரிய மறுக்கும் ட்யூப்லைட் போல் மினிர்ந்தது அடங்கியது சிலிர்த்தது.

கசாப்புக்கடையில் தொங்கும் ஆட்டுக்குடல் போல் மேகங்கள் தாழத் தொங்கின.

காலடியில் இரு கீரிப்பிள்ளைகளும் இரு மரநாய்களும் ஊர்ந்தோடி கேத்தரினை மோதுவது போல சில ஆந்தைகள் பறந்துபோயின. ஆந்தைகளின் கண்கள் ஏதோ ஓர் அபாயச் செய்தியை சொல்ல முயன்று தோற்றன. ஒலி அளந்து பறக்கும் வௌவால்கள் ஒலி கணிப்பு தவறி கேத்தரினின் மீது தாறுமாறாய் மோதிப் பறந்தன.

'என்ன செய்யலாம்? பேட்டியெடுத்த வீட்டுக்குள் ஓடி தஞ் சமடைந்து விடலாமா?'

"சேச்சே! எதற்கு கோழைத்தனம்? என்னதான் நடக்கப்போகிறது என பார்த்து விடுவோம்!"


வேகமாக நடக்க ஆரம்பித்தாள் கேத்தரின். முன்னால் நடக்கும் பாதையே தெரியவில்லை. இருள் அப்பியிருந்தது. பிரதான சாலைக்கு போய்விட்டால் பிரச்சனை இல்லை.

இப்போது மேகங்கள் முட்டி மோதி கரமுர சப்தம் எழுந்தது. ஏழெட்டு பிரியாணி தேக்ஸாக்களை உருட்டுவது போல் ஓசை.

சிதம்பரம் நகரத்துக்கு மட்டும் ஒரு தனிவானம் அமைந்தது போலொரு பிரமை பூத்தது.

மேகங்களுக்குள் சிறுசிறு மின்னல்கள் கிளைத்து மறைந்தன. ஷார்ட் சர்க்யூட் மின் பொறி போல்.

கம்பி மத்தாப்பு சிதறல்கள் போல் மின்னல்கள்.





பிளாஷ்லைட் வேலை செய்கிறதா என போட்டோகிராபர் தனியே அடித்து அடித்துப் பார்ப்பது போல்மின்னல்கள் வெளிச்சங்களை துப்பித் துப்பி மறைந்தன.

மழைமேகங்கள் ஒன்றொடொன்று மோதி பெரும் சப்தம் எழுப்பின.

இரு மின் ரயில்கள் நேருக்கு நேர் மோதிக் கொள்வது போல...

யானைக்கூட்டம் இன்னொரு யானைக் கூட்டத்துடன் முட்டிமோதி புழுதிப்புயல் கிளப்புவது போல!

சிங்கம் துரத்த நூற்றுக்கணக்கான எருமைக்கூட்டம் இணைந்து ஓடுவது போல!

இரு டைனசார்கள் காதல், மோதல் செய்வது போல!

மின்னல்கள் முழு வீரியமாம் உற்பத்தியாக ஆரம்பித்தன. சரசவென மின்னல்கள் உற்பத்தியாகி தரை மீது இறங்கின. தொடர்ந்து இடிகள் இடித்தன. ஒவ்வொரு இடியும் தன் மீது நிச்சயம் விழப் போகிறது என்கிற பயத்தை கேத்தரினுக்குள் உற்பத்தி செய்தது.

ஓட ஆரம்பித்தாள்.

மின்னல் தொடர்ந்து தாக்க ஆரம்பித்தது. கேத்தரினிலிருந்து முப்பதடி தூரத்தில் மின்னல் பாய்ந்து அப்பிராந்தியத்தையே ஒளிர வைத்து இருண்டது.

கேத்தரின் ஓடஓட!

மின்னல் அவளை குறிவைத்து தொடர்ந்து தாக்கியது!

தூரத்தில் பிரதான சாலை தெரிந்தது. ஓட்டத்தை துரிதப்படுத்தினாள். சாலை சந்திப்பில் நூற்றுக்கணக்கான செம்மறி ஆடுகள் குழுமி நின்றிருந்தன. ஆடுகளுக்கு இடையே ஓடி நின்றாள்.

பெரிது பெரிதாய் மூச்சுவிட்டபடி வானத்தை ஏறிட்டாள்.

உக்கிரம் குறைந்தது போல் பட்டது.

"அப்பாடா! உயிர் தப்பித்தோம்!" என பெருமூச்சுவிட்டாள் கேத்தரின். அவளின் பெருமூச்சு முடியும் முன்னமே ஒரு மின்னல் உருண்டு திரண்டு கேத்தரின் மீது பாய்ந்தது.

*5000*•F வெப்பத்தால் தாக்கப்பட்ட கேத்தரினின் உடலை ஒரு ஊழிப்பிரளய இடி தாக்கியது.

ஸிர்ரக்.....................பாங்

அவ்வளவுதான்....

கேத்தரினும் செம்மறி ஆடுகளும் கரிந்த கரித்துண்டுகளாய் ஆயிரம் தோராய திசை அமைத்து பறந்தனர்.

மாமிச பொசுங்கல் துர்வாசனை அப்பிராந்தியத்தை நாறடித்தது பற்பல நிமிடங்களுக்கு

# 10

கதிரவன் அழுதுஅழுது முகம் வீங்கியிருந்தான். அவனின் தன்னம்பிக்கை சுக்கு நூறாய் உடைந்து சிதறியிருந்தது.

மின்னல் ஒரு சீரியல் கில்லர் போல் பிரமித்தது. இயற்கையின் ஒவ்வொரு விஷயமும் புதிராயும் விடை காண முடியாத விடுகதையாகவும் தெரிந்தது.

கேத்தரின் மீது மின்னல் வெறித்தனமாக ஏன் பாய்ந்தது?

கோடிங் செய்யப்பட்ட மின்னலின் மர்மச் செய்திகளை அவள் டிகோடிங் செய்ய முயன்றாள். அது தான் அவள் செய்த மாபெரும் குற்றம். மின்னலைப் பற்றி பல வருடங்கள் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்திருக்கிறாள் கேத்தரின். உலகின் பல்வேறு பாகங்களுக்கு அதன் பொருட்டு போய் வந்திருக்கிறாள். அங்கெல்லாம் மடமின்னலால் தாக்கப்படாத அவள் சிதம்பரத்துக்கு வந்த இடத்தில் தாக்கப்பட்டு இறந்திருக்கிறாள். சிதம்பரத்து மின்னல்களுக்கு தனிவகை உக்கிரம் எப்படி சாத்தியம்? தொடர்ந்து சிதம்பரத்து மின்னல்கள் என்னையும் ஜெபமாலையையும் பலி எடுக்காமல் விடாதுகள் போல.

–அலைபேசி சிணுங்கியது. எடுத்து காதில் இணைத்தான். எதிர்முனையில் நர்ஸ் நளினி.

"ஹாய் கதிரவன்! நான் நளினி"

"ஹாய்!"

"என்ன அனீமிக்கா ஹாய் சொல்ற? டோண்ட் ஒர்ரிய்யா. ஒன்பது விக்கெட் போனாலும் கடைசி விக்கெட் வந்து ரன்களை அசத்தலாய் எடுப்பதில்லையா? முதலையின் வாயில் நின்று கொண்டு கூட ஜெயிக்கும் யுக்தியை யோசிக்கலாம். நஷ்டக்கணக்கில் எதனையும் வை – ஆனால் மிஞ்சியிருக்கும் உயிரையும் சாதிக்கத் துடிக்கும் பத்து விரல்களையும் வரவுக்கணக்கில் வை கண்ணாளா!"

"எஸ்!"

"உன்னை எதுக்கு கூப்ட்டேன் என்று யூகி பார்ப்போம்.."

"இன்னொரு மெழுகுவர்த்தி விருந்தா?"

"ஆசை ஆசை! கொச்சினின் நம்பூதிரி நாளைக்காலை சிதம்பரம் வருகிறார்! அவரை நீ சந்தித்தால் போதும்! மின்னலுக்கு எதிரான நிரந்தர தீர்வை பரிசளித்து விடுவார்!"

"எனக்கு நம்பிக்கையில்லை!"

"அவர் தங்குவதற்காக சாரதாராமில் ரூம் புக் பண்ணியுள்ளேன்.



விடியக்காலை அஞ்சுமணிக்கு விருந்தாசலம் வந்து விடுகிறார். நாம் டாக்ஸி வைத்து சிதம்பரத்துக்கு அழைத்து வரவேண்டியிருக்கும்."

"காலை நாலுமணிக்கு நாம கிளம்பி அஞ்சுமணிக்கு விருத்தாசலம் ஜங்ஷன் போய் அவரை ரீஸிவ் பண்ணுவம்!"

"ஓகே!"

"உங்காளு எப்டியிருக்கா? உன்னை மாதிரி பெஸிமிஸ்ட்டிக்கா இருக்காளா, இல்ல ஆப்டிமிஸ்ட்டிக்கா இருக்காளா?"

"நானும் அவளும் சேர்ந்து மின்னல்தாக்கி பிழைத்தோர் குழுமததை அவசரமாக கூட்டி இறந்துபோன கேத்தரினுக்கு ரெண்டு நிமிஷ மௌன அஞ்சலி செலுத்தினோம். அவளும் கடுமையான மன அழுத்தத்தில்தான் இருக்கா. நான் வெளில காட்டேறன்; அவ வெளில காட்டிக்கிறதில்லை!"

"சரி, நான் நாளை காலை மூன்றரை மணிக்கு வாடகை டாக்ஸியுடன் உன்னை சந்திக்கிறேன்!"

"பை!"

"பை நளினி!"

படுக்கையில் படுத்தான். தூக்கம் வரவில்லை. சிறிதளவு ஓயிட் ஒயின் குடித்தான். சில மணிநேர அல்லாட்டத்துக்கு பிறகு தூங்கிப்போனான்.

தூக்கத்தில் விசித்திரமான கனவுகள் அரங்கேறின.

மேக அரண்மனை.

அந்தப்புரம்.

மின்னல் மகாராணி நின்றிருந்தாள் – வெள்ளியை உருக்கி செய்தது போல் மினுமினுத்தாள். நமீதா மார்பகங்கள். தலைகேசத்தின் ஆங்காங்கே நட்சத்திரங்களை செருகியிருந்தாள்.

சுவரில் நூற்றுக்கணக்கான மனித உருவங்கள் வரையப்பட்டிருந்தன.

சிரித்தபடி சுவர் ஓவியங்களை நெருங்கினாள். கையில் மந்திரக்கோல் போல் எதனையோ வைத்திருந்தாள். அதனை வைத்து சுவர் ஓவியங்களை ஒவ்வொன்றாய் குறுக்கும் நெடுக்குமாய் பொசுக்கினாள்.

கடைசியாக கதிரவன் – ஜெபமாலை ஓவியங்களுக்கு முன் வந்து நின்றாள். வெகுநேரம் முறைத்தாள். "என்னிடமிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என மனப்பால் குடிக்கிறீர்களா? நடக்காது! ஆட்டத்தின் சுவைக்காக உங்களின் விக்கெட்டுகளை வீழ்த்தாமல் இருக்கிறேன். கொதிநீரில் உல்லாசமாக நீந்தும் ஆமைகள் நீங்கள்! எந்நேரத்திலும் வெந்து கூழாகி விடக்கூடும் நீங்கள்!"

–கனவு அறுந்தது. எழுந்தான். மணி 2, 30 'மீதி ஒரு மணியை உலாவிக்கழித்தான். குளித்தான். புத்தாடைக்கு மாறினான். சுடுநீரில் எலுமிச்சை சாறுவிட்டு பருகினான். கீழே காரின் ஹாரன் கேட்டது. நளினி வந்துவிட்டாள்.

ஓடிபோய் கதவைத்திறந்து விட்டான். நளினி புன்னகைத்தாள். "குட்மார்னிங் கதிர்!"

"காப்பி குடிக்கிறாயா!"

"குடு!"

ஒரு கோப்பையில் காப்பி தயாரித்து நீட்டினான். உறிஞ்சினாள். இருவரும் பிளாட்டை பூட்டிவிட்டு காருக்கு நடந்தனர்.

கார் விருதாசலம் நோக்கி சீறிப்பாய்ந்தது.

"சரியாக தூங்கினாயா?"

"இல்லை!"

"கெட்ட கன-வுகள் கண்டாயா?

"ஆமா!"

"என்ன கனவு?" விவரித்தான். துள்ளிக்குதித்தாள் நளினி. "எனக்கும் அதே கனவுதான் வந்தது கதிர். சுவர் ஓவியங்களில் எனது ஓவியமும் இருந்தது. எனது ஓவியத்தை சுட்டுப் பொசுக்குகிறாள் மின்னல் தேவதை!"

"ஜஸ்ட் பாரலல் திங்கிங் ப்ரீட்ஸ் ஸேம் டைப் ஆப் ட்ரீம்ஸ்..."

கார் விருத்தாசலம் சந்திப்புபோய் சேர்ந்தது. காத்திருப்பு அறையில் நம்பூதிரி அமர்ந்திருந்தார். தாடி வைத்த சரத்குமாராய் இருந்தார். கழுத்து ம்முழுக்க உத்திராட்சங்கொட்டை மாலைகள். நெற்றியில் விபுதியும் குங்குமும் இடதுகை மணிக்கட்டி வர்ணவர்ணக்கயிறுகள். காவிநிற ஜிப்பா. பட்டு வேட்டி.

"நமஸ்காரம் கதிரவன்.. நமஸ்காரம் நளினி!"

"வணக்கம் சாமி!"

காரின் பின்னிருக்கையில் நம்பூதிரியும் கதிரவனும் அமர்ந்து கொண்டனர். முன்னிருக்கையில் ஓட்டுநருக்கு அருகில் நளினி அமர்ந்து கொண்டாள். "பிரயாணம் எப்டியிருந்தது நம்பூதிரி!"

"ஷேமம்.."

கதிரவனின் முகத்தை சிலபல நொடிகள் வெறித்த நம்பூதிரி இருண்டார். "மிகமிக சிக்கலான தருணத்தில்தான் என்னை வரவழைத்துள்ளீர்கள். கதிரவன் மரணத்தின் விளிம்பில் நின்று அல்லாடுகிறார். அவரை காப்பாற்றும்போது பல விரும்பத்தகாத நிகழ்வுகள் அரங்கேறலாம். நாம் எதற்கும் தயாராய் இருக்க வேண்டும்!"



"உங்களை முழுக்கமுழுக்க நம்பி சரணடைந்து விட்டோம் நம்பூதிரி. எங்களைக் காப்பாற்றுங்க!"

"அமாவாசைக்கு இன்னும் ஐந்தே நாட்கள். அதற்குள் நாம் மின்னலுக்கு எதிராக வெற்றி பெற வேண்டும். அமாவாசை தாண்டிவிட்டால் கதிரவனையும் ஜெபமாலையையும் காப்பாற்ற படைத்த இறைவனாலும் முடியாது..."

கை நடுங்கினான் கதிரவன்.

நம்பூதிரியின் கை கதிரவனின் கைகளைத் தேடிப்பிடித்து ஆறுதல் படுத்தியது.

கார் சாரதாராமுக்குள் பிரவேசித்தது. வெளிறியிருந்த வானத்திலிருந்து மின்னல்கள் உற்பத்தியாகின. காரை விட்டு இறங்கின நம்பூதிரி அண்ணாந்து பயமுறுத்தும் மின்னல்களை வசைபொழந்தார்.

வானம் வெறிபிடித்த சிங்கம்போல கிர்ரென உறுமியது.

## 11

நம்பூதிரி வானிலை ஆய்வு மையம் அளித்த அறிக்கைகளை வாசித்தார்.

*1997–216* தடவைகள் மின்னல் மனிதரை தாக்கியிருக்கிறது.

*1998–251* தடவைகள் மின்னல் தாக்குதல்கள்

*1999–265* தடவைகள்

*2000–270* தடவைகன்

*2001–284* தடவைக்ன்

*2002–285* தடவைகள்

*2003–303* தடவைகள் மின்னல் தாக்குதல்கள்

*2004–310* தடவைகள்

*2006–365* தடவைகள்–அதாவது மின்னல் தாக்குதல் இல்லாத தேதிகள் 2006 ஆம் ஆண்டில் இல்லவே இல்லை. மின்னல் பாதிப்பு சிதம்பரம் தாலுக்காவைத் தாண்டினால் இல்லவே இல்லை. கடலூரில் கடந்த பத்து வருடங்களில் நான்கே நான்கு மின்னல் தாக்குதல்கள் தான் நடந்திருக்கின்றன. சில நகரங்களில் கடந்த ஐம்பது வருடங்களில் ஒரே ஒரு மின்னல் தாக்குதல் கூட நடக்கவில்லை. தமிழ்நாடு முழுக்க எடுத்துக் கொண்டால் மின்னல் பாதிப்பும் குறைவு. மின்னல்கள் ஏற்படுத்தும் உயிர் சேதங்களும் குறைவு.

அறிக்கைகளைப் படித்து முடித்துவிட்டு கதிரவனை அருகில்

அழைத்தார். அவனது இரு கைரேகைகளையும் உறுத்தார். பின் அவனது காது மடல்களையும் உதடுகளையும் கண்களின் கருவிழிகளையும் ஆராய்ந்தார்.

தடவைகள் உனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து இன்று வரை மழை நாட்களில் ஏதேனும் குற்றம் புரிந்திருக்கிறாயா!"

"இல்லை!"

"உன்னுடைய மூதாதையர் யாராவது மின்னலால் தாக்கப்பட்டது உண்டா?"

"எனக்குத் தெரிந்து இல்லை!"

"நீ யாரையும் காதலிக்கிறாயா?"

தயங்கினான்.

"பரவாயில்லை சொல்லு!"

ஜெபமாலை பற்றி விவரித்தான்.

"ரெண்டு பேருமே மின்னலால் பாதிக்கப்பட்டுள்ளீர்கள்! உங்களிருவரையும் பாதுகாக்க ஓர் அசாதாரண யுக்தி தேவைப்படுகிறது. நான் சொல்வதை கவனமாக கேள். முதலில் நீங்கள் இருவரும் கவர்மென்ட் கெஜட் மூலம் உங்களது



"எயிட்ஸ் விழிப்புணர்ச்சி பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ள நடிகை பிபாஷா பாசு சமீபத்தில் எயிட்ஸ் நோயாளிகளோடு நடனமாடினார்.

– க. ரவீந்திரன்



பெயர்களை மாற்றி வைத்துக்கொள்ள வேண்டும். நான் சில மூலிகை மாத்திரைகளை கொடுப்பேன். அதனை நீங்களிருவரும் உட்கொண்டால் உங்களது வியர்வை வாசனைகள் நிரந்தரமாய் மாறிவிடும். பிளாஸ்டிக் சர்ஜரி மூலம் உங்களது கைரேகைகளை மாற்றிக் கொள்ளுங்கள். உங்களது ஹேர்ஸ்டைலை மாற்றியமையுங்கள். உங்களது உணவு பழக்கவழக்கத்தை தலைகீழாய் மாற்றுங்கள். உங்களது ட்ரஸிங் சென்ஸை உல்ட்டா பண்ணுங்கள். திருமணத்துக்குபின் 48 நாட்கள் கடல் சாராத ஒரு நகரத்தில் தங்கிவிட்டு வாருங்கள். அதன் பின் ஆயுளுக்கும் மின்னல் உங்களை தாக்காது!"

"அப்படியே செய்கிறேன் சாமி!"

"நளினி! கதிரவனின் காதலி ஜெபமாலையை அழைத்து வா. அவளது கைரேகையையும் நான் ஆராய வேண்டியிருக்கிறது!"

தலையாட்டினாள் நளினி.

நம்பூதிரியை ஓய்வெடுக்க விட்டுவிட்டு நளினியும் கதிரவனும் கிளம்பினர். மூவரும் பேசுவதை ஒட்டுக்கேட்ட இரு கொலைகாரக் கண்கள் இரத்தச் சிவப்பாய் கனன்றன.

நளினியைக் கண்டதும் ஒப்புக்கு வவேற்றாள் ஜெபமாலை.

"உன்கிட்ட கொஞ்சம் தனியா பேசனும்!"

"இப்ப நான் தனியாத்தான் இருக்கேன்! சொல்லு!"

நம்பூதிரியை அழைத்து வந்திருப்பதையும் நம்பூதிரி சொன்ன உபாயங்களையும் விவரித்தாள் நளினி.

"இன்று மாலை உன்னை அழைத்து வரச் சொல்லியிருக்கிறார் நம்பூதிரி. போவதற்கு முன் எனக்கு ஒரு விஷயத்தை தெளிவு படுத்தி விடு. நீ கதிரவனைக் காதலிக்கிறாயா இல்லை?"

தயங்கினாள் ஜெபா.

"ஜெபா! நீ கதிரவனை காதலிக்கிறாய். ஆனால் நீயும் அவனும் கல்யாணம் செஞ்சுகிட்டா அவன் மின்னல் தாக்கி செத்திருவானோன்னு பயம் உனக்கு. அந்த பயம் அர்த்தமில்லாதது. உங்களிருவரின் காதலையும் ஆயுளையும் பாதுகாக்கவே முயற்சிகள் எடுத்து வருகிறேன்!"

அழுதாள் ஜெபா. "நான் கதிரவனை காதலிப்பது உண்மைதான்!"

"குட் கேர்ள்! இதுபோதும் எனக்கு. நீயும் காதலிக்கிறாய் என தெரிந்தால் கதிரவன் புதுபலம் பெறுவான்!"

அழுகையுடன் முறுவலித்தாள் ஜெபா.

அலைபேசியில் கதிரவனின் எண்ணை அமுக்கினாள். எதிர்முனை உயிர்த்தது "கதிர்!"



"நடிகை ராணி முகர்ஜி தன்னுடைய எடையைக் கணிசமாக குறைத்துவிட்டார். எடையை எப்படிக் குறைத்தார் என்பதை அவர் வெளியிட விரும்பவில்லை. நடிகைகளின் அழகு, வருமானம், வயது ரகசியங்கள்தான். அந்த லிஸ்டில் இப்போது எடை குறைப்பும் சேர்ந்து விட்டது.

– க. ரவீந்திரன்

"சொல் நளினி!"

"ஜெபா பேசுகிறாள். அவள் உன்னிடத்தில் ஏதோ சொல்ல வேண்டுமாம்!"

அலைபேசி கைமாறியது. "நான் அறைக்கு வெளியே இருக்கிறேன். ரெண்டு பேரும் மனசைவிட்டுப் பேசுங்க!" அகன்றாள்.

"சொல்லு ஜெபா!"

"என்னை மன்னிச்சிருங்க கதிர். உங்க உணர்வுகளோட நான் ரொம்பவே விளையாடிட்டேன். உங்களுக்கு என் மேல் காதல் உணர்வு பூப்பதற்கு முன்னமே எனக்கு உங்க மேல் காதல் உணர்வு பூத்துவிட்டது. நான் ஆர்பனேஜில் வளர்ந்தவள். எனக்கு எந்த அன்பும் நீண்ட நாள் நிலைத்ததில்லை. அதனால் தான் எனது காதலை வெளிப்படையாக அறிவிக்கவோ அல்லது உங்களது காதலை அங்கீகரிக்கவோ தயங்கி மயங்கினேன். குழப்பம் குழப்பம் மகாக் குழப்பம்!"

"பாஸ்ட் இஸ் பாஸ்ட். இப்பச் சொல்லு – நீ என்னைக் காதலிக்கிறாயா, இல்லையா?"

"ஐ லவ் யூ கதிர்!"

"டெரிபிக்! மீண்டும் மீண்டும் என் காது போதும் போதும்னு சொல்ற அளவுக்கு எனக்கு ஐ லவ் யூ சொல்லு கண்ணே!"

"ஐ லவ் யூ... ஐ லவ் யூ"

"நீ என் பக்கத்தில் இருந்தால் உன்னை முத்தமழையால் மூழ்கடித்திருப்பேன்!"



"முத்தத்தை மழையாய் தராதீர்கள். மழை என்றால் மின்னல் தவிர்க்கமுடியாத வார்த்தையாகி விடுகிறது."

இருவரும் சங்கீதமாய் சிரித்தனர்.

"எனக்கு மிகமிக மகிழ்ச்சியாக இருக்கிறது ஜெபா. இந்த நிமிடமே செத்து விடலாமென தோணுகிறது!"

"இந்த மாதிரி உணர்வு உங்களுக்கு வந்துவிடக் கூடாது என்பதற்காகவும் தான் நான் எனது காதலை வெளிப்படையாக அறிவிக்கவில்லை. நம் காதல் நம்மை கொன்று விடக்கூடாது; நம்மை நூறாண்டுக்காலம் வாழ வைக்க வேண்டும்!"

"மாலை நான்குமணிக்கு நளினி பிளாட் வந்து விடு. மூவரும் சேர்ந்தே நம்பூதிரியைப் பார்க்கச் செல்வோம்!"

"சரி!"

"போனை வைப்பதற்கு முன் ஒரு சிறு வேண்டுகோள்!"

"என்ன, முத்தம் கித்தம் வேண்டுமா?" கிண்டலித்தாள்.

"இல்லை. பார்த்த மோதல் நாளே உன்னை வேட்டையாடு விளையாடு பாடலை எனக்காக ஒரு தடவை பாடேன்!"

பாட ஆரம்பித்தாள்.

வெளியில் நின்றிருந்த நளினியை நெருங்கினாள் மஞ்சுளா. "ஏன் வெளிய நிக்றீங்க நளினி?"

"காதலர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள் மஞ்சு!"

இதுவரை சாந்தமாக இருந்த மஞ்சுளாவின் முகம் கொடூரமாய் மாறியது. சப்தம் எழாமல் வாய்க்குள் பற்களை நறநறவென கடித்தாள்.

## 12

ஹோட்டல் பேலஸ்.

செவ்வக நீச்சல் குளம். நீர் பனிநீலநிறமாய் பளபளத்தது. நம்பூதிரி டைவிங் போர்டிலிருந்து எகிறி சம்மணவாக்கில் நான்கைந்து சாமர்சால்ட்கள் செய்து மனித அம்பாய் நீருக்குள் செருகினார்.

நீருக்குள் வெகுநேரம் நீந்திவிட்டு மிக நிதானமாக நீரின் மேற்பரப்புக்கு வந்தார். பிளாட்பாரத்தில் நின்றிருந்தாள் நளினி.

"என்ன நளினி! தனியே நிற்கிறாய்? கதிரவனும் ஜெபமாலையும் எங்கே?"

"கதிரவனையும் ஜெபமாலையையும் வெளிப்படையாக பேச வைத்துவிட்டேன். இருவரும் ஒருவரின் மீது ஒருவர் காதலாய் கசிந்துருகி விட்டனர்!"

"நல்லது !"

"மனதில் ஒரு சிறுகுழப்பம். அதனால்தான் கதிரையும் ஜெபாவையும் பின்னே வரச் சொல்லி விட்டு நான் தனியே வந்தேன்..."

"என்ன குழப்பம் !"

"நேற்று உங்களுடன் பேசிவிட்டு நானும் கதிரவனும் கிளம்பும் போது யாரோ ஒருவன் தூரத்தில் நின்று எங்களை கண்காணித்தான். கதிர் - ஜெபா - காதலை மனந்திறந்து பேசி வெளிப்படுத்திக் கொண்டனர். அதனை நான் சொன்ன போது மஞ்சுவின் முகம் போன போக்கே சரியில்லை."

"கதிரவனை அவள் ஒரு தலையாய் காதலித்திருக்கக் கூடும் !"

"நானும் தான் கதிரவனை ஒருதலையாய் காதலிக்கிறேன். பொறாமை வேறு, கொலைவெறி வேறு. மஞ்சுளாவின் முகத்தில் தெரிந்தது பொறாமையல்ல கொலைவெறி. தொடர் மின்னல் தாக்குதல்களின் பின்னணியில் இயற்கை மட்டுமில்லை விபரீத மனிதர்களும் இருப்பார்களோ என சந்தேகப்படுகிறேன் !"

இடி இடியென சிரித்தார் நம்பூதிரி. "சாத்தியம் இல்லை நளினி !"

இருவரும் பேசிக்



"முற்றும் துறந்தாலும் நாட்டுப்பற்றைத் துறக்க முடியாதல்லவா? அலகாபாத்தில் நடந்த அர்த்த கும்பமேளாவின் போது சாது ஒருவர் நமது தேசியக் கொடியோடு காட்சியளித்தார்.

— க. ரவீந்திரன்



கொண்டிருக்கும் போதே வானம் இருள ஆரம்பித்தது. Rapid chess காய் நகர்த்தல் போல மேகங்கள் குறுக்கே நெடுக்கே நகர்ந்து தங்களது நிலைகளை மாற்ற ஆரம்பித்தன. சூரியகிரகணம் நடப்பது போல் இருள் கவிழ்ந்தது.

"நம்பூதிரி !" அலறினாள், நளினி.

"பயப்படாதே ! நானிருக்க பயமேன் ! எனக்கு கட்டுப்படாத பேய் பிசாசுகளும் ஜின்களும் இப்பிரபஞ்சத்தில் கிடையாது. என்னை யாராவது தாக்க முயற்சித்தால் அவர்களே தாக்கப்பட்டு அழிவார்கள் !"

நம்பூதிரியின் வார்த்தைகளை அலட்சியப் படுத்தியபடி மின்னல்கள் வெட்ட ஆரம் பித்தன.

பூமி ஒரு ஆப்பிள் பழம்; மனிதர்கள் அதன் மேல் ஊரும் எறும்புகள். ஆப்பிள்பழத்தை துண்டாடுகிறேன் என இயற்கை நீள்கத்தி எடுத்து கிளம்பி விட்டதோ?

நம்பூதிரி சில மந்திரங்களை ஜெபிக்க ஆரம்பித்தார். அவர் ஜெபிக்க ஜெபிக்க மழை மேகங்கள் பலவீனமடைந்து மின்னல்கள் வெட்டுவது குறைந்தன. சில நிமிடங்கள் கரைந்தபின் மழைமேகங்கள் முன்னிலும் அடர்வாக முட்டிக் கொண்டு மின்னல்களை துப்பின.

டிஜிட்டல் சாகசமாய் ஒலி சாகசங்கள்.

ஒரு மின்னல் கோகோ ஆடுவது போல் கஜகஜவென முன்னேறி நீச்சல் குள நீரைத் தாக்கியது. ஆயிரம் வோல்ட் மின்சாரம் நீருக்குள் இருந்த நம்பூதிரியையும் ஈரத்தரையிலிருந்த நளினியையும் ஒருசேர தாக்கியது. நம்பூதிரி கருகி பிணமானார். நளினி தூக்கியெறியப்பட்டாள். விழுந்த வேகத்தில் கண், காது, மூக்கு வாயிலிருந்து இரத்தம் வழிந்தது.

வந்த காரியம் முடிந்த மகிழ்ச்சியில் மின்னல்கள் பின்வாங்கின. மழை மேகங்கள் அகன்றன. வெயில் வானம் உக்கிரம் காட்டியது.

## 13

**கா**வல்துறை வாகனங்கள் ஹோட்டல் பேலஸின் முன் குழுமியிருந்தன. புகைப்பட நிபுணர் நளினி, நம்பூதிரி பிணங்களை புகைப்படம் எடுத்தார். பிரேதங்கள் அப்புறப்படுத்தப்பட்டன.

கதிரவனும் ஜெபமாலையும் அழுதபடி நின்றிருந்தனர்.

காவல்துறை அதிகாரி கதிரவனிடம் திரும்பினார். "நான் உங்களிருவரையும் விசாரிக்க வேண்டும் !"

தனியே ஒதுங்கினர்.

"என்ன நடந்தது கதிரவன்? நம்பூதிரி எதற்கு சிதம்பரத்து வந்தார்?"

நடந்ததை விவரித்தான் கதிரவன்.

ஆதங்கமாய் சிரித்தார் காவல்துறை அதிகாரி. "இயற்கையால் ஏற்படும் விபரீதங்களை தடுத்து நிறுத்த மாந்திரீகர்களால் முடியுமா கதிரவன்? நம்பூதிரி உங்கள் இருவரையும் காப்பாற்றுவது இருக்கட்டும். முதலில் அவரால் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ள முடியவில்லையே? நம்பூதிரியின் பலத்தை மிகையாய் நம்பி தன்னுயிரை இழந்து விட்டார் நர்ஸ் நளினி!"

"சார்! சுமார் 45 நிமிடங்களுக்கு முன்னால் நளினி அனுப்பிய எஸ் எம் எஸ் செய்தி இதோ!"

அலைபேசியை பிரித்துக் காட்டினான்.

'கதிர்! மஞ்சுளாவின் பின் பல மர்மங்கள் ஒளிந்துள்ளன. மின்னல் தாக்குதல்களில் அவளும் சம்பந்தப்பட்டிருக்கக்கூடும் என நம்புகிறேன். என்ன விதத்தில் என எனக்கு தெரியாது. அதை நீதான் கண்டுபிடிக்க வேண்டும். நீயும் நளினியும் மாலை ஆறுமணிக்கு நம்பூதிரியை பார்க்க வந்தால் போதும். சரி, ஒரு ஜோக் சொல்லட்டுமா? ஸ்பின் பௌலர் கும்ப்ளேவின் அப்பா பெயர் என்ன? அம்மா பெயர் என்ன? தெரியவில்லையா, நானே சொல்றேன்! கும்ப்ளேயின் அப்பா பெயர் ஆம்பிளே! கும்ப்ளேயின் அம்மா பொம்பிளே! பை!

காவல்துறை அதிகாரி கண்களைக் குறுக்கினார். "மஞ்சுளாவை கண்காணிப்பது எங்கள் பொறுப்பு! நீங்களிருவரும் மின்னல் தாக்குதல்களிலிருந்து விலகியே நில்லுங்கள்!"

இருவரும் தலையாட்டினர்.

ஒரு வாரத்துக்குப்பின்!

காவல்துறை அதிகாரி முருகையாவின் வயர்லெஸ் மைக் அழைத்தது.

"சொல்லு! என்ன விஷயம்?"

"மஞ்சுளா தினசரி ஒரு 35வயது ஆண்மகனை சந்திக்கிறார். இரவுகளில் அவர்கள் அம்மா பேட்டை ரோட்டிலுள்ள ஒரு பங்களாவில் சந்திக்கிறார்கள் இன்றிரவும் அவர்கள் சந்திக்கக்கூடும்!"

"ஓகே!"

"இரவு மப்டியில் முருகையா மிடுக்காக காட்சியளித்தார்.

பங்களாவின் போர்டிகோவில் ஏறி படுக்கையறை ஜன்னலுக்கு ஊர்ந்து போனார். பேச்சு சப்தம் கேட்டது கூர்ப்பானார்.

"தென்றலரசா! நீ செய்வது உனக்கே சரியா?"

"என்ன ஆலாபிக்கிறாய்?"

"ஒரேயடியாக எல்லை மீறுகிறாய்!"



"எப்படி"

"நம்பூதிரியையும் நளினியையும் ஏன் கொன்றாய்?"

"முதல் கொலை செய்யத்தான் மனம் தயங்கும். அடுத்தடுத்து கொலைகளை அதே மனம் சுவாரசியமாக முழு ஈடுபாடாக செய்யும்!"

"மனிதர்களை நீ கொல்கிறாயா, மின்னல் கொல்கிறதா?"

"நான் ஏவி மின்னல் கொல்கிறது!"

"மின்னல் உயிருள்ள ஜந்துவா என்ன?"

"அதற்கும் மேலே!"


"எனக்குப் புரியவில்லை!"

"பயாலஜிகல் கிளாக் என்றொரு வார்த்தையை கேள்விப்பட்டிருக்கிறாயா? அதற்கு 'உயிரியல் கடிகாரம்' என பொருளுண்டு. இயற்கை பிரபஞ்சத்திலுள்ள உயிருள்ள உயிரற்ற அனைத்துக்கும் உயிரியல் கடிகாரம் பொருத்தியுள்ளது. அதனால தான் பூமி குறிப்பிட்ட கோணத்தில் சாய்ந்தபடி தன்னையும் சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றி வருகிறது. அதனாலதான் சேவல் விடியற்காலையில் கூவுகிறது, குயில் பாடுகிறது, காக்கா கறுப்பாக இருக்கிறது. புறா வெள்ளையாக இருக்கிறது. கங்காரு குட்டி பிறவிப்பாதையிலிருந்து செங்குத்தாய் ஊர்ந்து கங்காருவின் பைக்குள் போய் விழுகிறது. ஆணின் விந்தணுக்கள் எந்த கட்டளையும் தேவைப்படாமல் பெண்ணின் முட்டைக்கரு நோக்கி நீந்துகின்றன. ஒட்டு மொத்தத்தில் பிரபஞ்சத்தை ஒருவகை உயிரியல் கடிகாரமே கட்டிக்காக்கிறது!"

"மின்னலுக்கு உயிரியல் கடிகாரம் இல்லையா?"

"இப்பத்தான் விஷயத்துக்கு வந்திருக்க. மின்னலுக்கு உயிரியல் கடிகாரம் உண்டு. 170000 வயதானால்தான் ஒரு மனிதனை மின்னலோ இடியோ ஒருதடவை தாக்கும். மின்னல் பொதுவாக பருவமழைக்காலத்திலும் அபூர்வமாக கோடை மழை காலத்திலும் தோன்றும். நான் எனது மந்திரசக்தியால் மின்னலின் உயிரியல் கடிகாரத்தை மாற்றி அமைத்து விட்டேன் – எனக்கு சௌகரியமாக. என்னால் மின்னலை வருடத்தின் 365 நாளும் தோற்றுவிக்க முடியும். அத்துடன் பிறந்த குழந்தை முதல் இறக்கபோகும் குடுகுடு கிழவன் வரை யார்மேலும் என்னால மின்னலை ஏவ முடியும். காட்டுயானைகளை பழக்கி மரங்களை தூக்கச் செய்வதில்லையா? சிங்கங்களை பழக்கி சர்க்கஸில் நெருப்புகப வளையங்களை தாண்டச் சொல்வதில்லையா? அதுபோல் மழை மேகங்களை பழக்கி மின்னல்களை உற்பத்தி செய்ய வைத்து விரும்பிய ஆளைத் தாக்க ஏவி விடுகிறேன்!"

"இதெல்லாம் எதுக்கு? சிதம்பரத்து மக்கள் மேல் உனக்கென்ன கோபம்?"



"ஆயுதம் தரித்தவர்களில் ராமனாகவும், மீன்களில் முதலையாகவும் ஆறுகளில் கங்கையாகவும் தாம் திகழுவதாக கண்ணன் கீதையில் கூறுகிறார். அத்தகைய கங்கைக் கரையில் நடந்த அர்த்த கும்பமேளாவில் பல லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். முஸ்லீம்களும் கங்கையைப் புனித நதியாகக் கருதுகின்றனர். அர்த்த கும்பமேளாவின்போது முஸ்லீம்களும் புனித நீராடினர்.

– க. ரவீந்திரன்

---

"1996 ஆம் ஆண்டு சிதம்பரத்தில் நடந்த ஒரு திருவிழா ஒன்றில் எனது மேஜிக் ஷோ இலவசமாய் நடத்த அனுமதி கேட்டேன். அனுமதி மறுத்துவிட்டார்கள். அத்துடன் நில்லாது 'கத்துக்குட்டி' 'உனக்கென்ன பி. ஸி. சர்க்கார்–னு நினைப்பா?' 'நீ மேஜிக் பண்ணி எவன் பாக்றது? தலைக்கு நூறுரூபா குடுத்து பாக்கச் சொன்னாலும் பாக்கமாட்டோம்' என பரிகாசம் பண்ணினர். 'அடப்பாவிகளா! அனாதரவாய் நிற்கும் என்னையா பழித்து இழித்து பேசுகிறீர்கள்! உங்க தலைமேல இடிவிழ!' என சபித்தேன். அதற்கும் சிரித்தனர். "பார்யா பய்யன் நம்மள சபிக்கிறான்! எங்க உனக்கு திறமையிருந்தா எங்க மேல இடிவிழச் செய் பார்ப்பம்' – என கைகொட்டி சிரித்தனர். அன்றைக்கு எடுத்தேன் சபதம் – சிதம்பத்தின் நிம்மதியை கெடுத்துவிட வேண்டுமென்று." சிரித்தான் தென்றல ரசன். அவனது கரேல் முகம் மினிர்ந்தது.

"உன்னுடன் பழகின பாவத்துக்காக கூறுகிறேன். இத்துடன் விட்டு விடு. நடந்ததை கெட்ட கனவாய் மறந்துவிடலாம். நீயும் நானும் திருமணம் செய்து வாழ்க்கையில் செட்டிலாகி விடலாம்!"





"நோ! இன்னும் நான் பல பிணங்கள் பார்க்க வேண்டும்"

"ஃப்ரீஸ்!" என்றபடி காட்சியமைப்புக்குள் பாய்ந்தார் முருகையா. அவரது துப்பாக்கி கக்கிய தோட்டா தென்றலரசனை காப்பாற்ற பாய்ந்த மஞ்சுளாவின் இடது நெஞ்சை துளைத்து வெளியேறியது.

தென் றலரசன் குழிமுயலாய் ஓடினான்.

முருகையா சுட்ட தோட்டாக்களின் திசையை மாற்றி அமைக்க ஆரம்பித்தான் தென்றலரசன்.

அப்போதுதான் முருகையாவுக்கு ஒரு யோசனை உதித்தது. அவரும் அவரது துணை அதிகாரிகளும் வேண்டுமென்றே இலக்கில்லாமல் சுட ஆரம்பித்தனர். தென்றலரசனின் உபயத்தால் அவற்றின் இலக்குமாறி தைத்தன. ஓவ்! தோட்டாக்களின் சாத்தியக்கூறு விதிகளை முறியடிக்கிறானா?

முருகையா சுட்ட ஒரு தோட்டாவை தென்றலரசன் திசை மாற்றினான்.

அது மிகச் சரியாக தென்றலரசனின் இதயத்தைத் துளைத்துக் கொண்டு வெளியேறியது.

போலீஸ் படை மரணத்தறுவாயில் நிற்கும் தென்றலரசனை சுற்றி வளைத்தது. ஒருநொடி யோசித்தான். பின் எதனையோ முணுமுணுத்தான். வெவ்வேறு திசைகளில் விரல்களை ஆட்டி உச்சந்தலையில் சுட்டினான்....

அவ்வளவுதான்.

மழைமேகங்கள் சூழ்ந்தன. மின்னல்களும் இடிகளும் உற்பத்தியாகின. காவல்துறை அதிகாரிகள் பதறிசிதறி ஓட மின்னல் சரசரவென கிளைத்து தென்றலரசனின் தலையைத் தாக்கியது. இரு நொடி தாமதத்தில் ஒரு இடி தென்றலரசனின் உடலில் இறங்கியது.

ஒளிரும் மாமிசத்துண்டுகளாய்ச் சிதறினான் தென்றலரசன்.

**வை**த்தீஸ்வரன் கோயில்.

மங்கலநாணை ஜெபா கழுத்தில் பூட்டினான் கதிர். அட்சதை தூவப்பட்டன. மங்கல வாத்தியங்கள் முழங்கின.

புதுமணத்தம்பதியை யாரோ ஒரு நபர் புகைப்படம் எடுத்தார். பிளாஷ் மின்னியது.

"பிளாஷை அடிக்காதிங்கப்பா. மீண்டும் மின்னல்கள்தான் தாக்க வந்திருச்சோன்னு பயந்துட்டேன்!"

மணமக்களை வாழ்த்த வந்த கூட்டம் கோரஸாய் சிரித்தது!..

(முற்றும்)